Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 11 சனிக்கிழமை (24.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 175

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1328)













# கால அவகாசம் வழங்க வேண்டும்

## இந்தியா வலியுறுத்துகிறது

(புதுடில்லி)

சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான இலக்குகளை அடைவதற்கு ஜனநாயக நாடான இலங்கைக்கு மேலும் கால அவகாசத்தையும் சந்தர்ப்பத்தையும் வழங்க வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது.

அனைத்து இன மக்களின் சுயகௌரவம், சமத்துவம் மற்றும் மரியாதையை உறுதிப்படுத்தும் நல்லிணக்கத்திற்காக இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணைக்கு

15 ஆம் பக்கம் பார்க்க

# சிவாஜி, சிறீகாந்தாவுக்கு கூட்டமைப்பில் கதவடைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை தொடர்பாக ஆராயும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 5 கட்சிகளின் கூட்டத்திற்கு சென்ற சிவாஜிலிங்கம் மற்றும் சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவிற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் கொழும்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்ற வேளை அதில் கலந்துகொள்வதற்காக சென்ற மேற்படி இருவரும் உள்ளே செல்ல அனுமதி மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர். அத்துடன் இவர்கள் உள்ளே வந்தால், தான் கூட்டத்திலிருந்து வெளியேறுவதாகவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரையும் கூட்டத்திற்கு அனுமதிக்காமல் திருப்பி அனுப்பிய வேளை குறித்த

15 ஆம் பக்கம் பார்க்க

# வலி.தென்மேற்கு பிரதேச சபையில் தவிசாளருக்கு எதிராக குற்றச்சாட்டு

## ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவிப்பு

(மானிப்பாய்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வலி. தென்மேற்கு பிரதேச சபையின் ஆளும்கட்சி உறுப்பினர்கள் தவிசாளர் ஜெபநேசன் அப்பதவிக்கு பொருத்தமானவர் அல்ல எனவும், சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நேர்மாறாக செயற்படுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தவிசாளர் செயற்பாட்டில் அதிருப்தியுற்ற ஆளும்கட்சி உறுப்பினர்கள் 9 பேர் அவர் மீது எட்டு குற்றச்சாட்டுக்களை சுமத்தி அது குறித்து விவாதிப்பதற்கு விசேட கூட்டம் ஒன்றை கூட்டுமாறு கோரியதற்கிணங்க நேற்றைய தினம் விசேட கூட்டம் கூட்டப்பட்டது.


இதன்போதே தவிசாளரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் குறித்தும் அதற்கு

15 ஆம் பக்கம் பார்க்க

# கிளிநொச்சியில் 1300 மில்லியனில் ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அறிவியல் நகரில் 1300 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இலங்கை ஜேர்மன் உயர் தொழில் பயிற்சி நிறுவனம் எமது பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்பட இருக்கின்ற இலங்கை ஜேர்மன் உயர் தொழில் பயிற்சி நிறுவனத்திற்கு நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டும் நிகழ்விலும் கிளிநொச்சி நகரில் முதற்கட்டமாக 65 இலட்சம் ரூபாவில் அமைக்கப்பட்ட மேற்படி நிறுவனத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்விலும் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வேலைவாய்ப்பற்று இருக்கும் பெரும்பாலான இளைஞர் யுவதிகள் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் தங்களது கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்துகொள்கின்ற போது இலகுவாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே இவ்வாறான உயர் தொழில் நுட்ப

15 ஆம் பக்கம் பார்க்க

# ராஜேஸ்வரி சண்முகம் காலமானார்



(யாழ்ப்பாணம்)

பிரபல வானொலி அறிவிப்பாளர் திருமதி ராஜேஸ்வரி சண்முகம் நேற்று காலமானார். சுகயீனமுற்று யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வானொலிக்குயில் நேற்று மாலை காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 72.

15 ஆம் பக்கம் பார்க்க

# எதிர்க் கட்சியின் செயற்பாடு கவலை கொள்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையை தோற்கடிப்பதற்காக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்திருந்த போது எதிர்க்கட்சி இந்த விடயத்தில் விலகியிருந்தமையானது கவலையளிப்பதாக உள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பண்டாரகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்க சமர்பித்திருந்த பிரேரணை தொடர்பான கலந்துரையாடல்கள் இடம் பெற்ற போது எதிர்கட்சி வடக்கிற்கு சென்று கருத்துக்களை வெளியிட்டது.

ஜெனிவா மனித உரிமை கூட்டத்தொடரில், இலங்கை எதிர்கொண்ட தோல்வி குறித்து, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்

எனினும், எப்பொழுதும் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு அடிபணிய இடம் தரப்போவதில்லை.

பயங்கரவாத நடவடிக்கைகளை முடிவிற்குக் கொண்டு வந்த நிலையில், நிரந்தரமான சமாதான சூழ்நிலையை எதிர்

15 ஆம் பக்கம் பார்க்க

# தமிழர்கள் சம உரிமையுடன் வாழ சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை

## ரணிலின் கண்டுபிடிப்பு இது

(கொழும்பு)

நாட்டின் சகல அர்சியல் கட்சிகளும், பொதுமக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ். சேனாநாயக்கவின் அறுபதாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன வன்முறைகளுக்கு நாட்டை ஆட்சி செய்த சகல அரசியல் கட்சிகளுமே மக்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டும்.

இந்த நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் தமிழ் மக்களுக்கு சம உரிமையுடன் வாழக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்கவில்லை என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோன்று ஜனநாயக ரீதியில் அமைதியாக பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடாது, ஆயுதம் ஏந்திய இளைஞர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி தமிழ் அரசியல் கட்சிகள் வன்முறைகளை தூண்டியுள்ளன.

எனவே நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் தமிழ் மக்கள் உள்ளிட்ட நாட்டு மக்களிடம்

15 ஆம் பக்கம் பார்க்க

# நயினாதீவு படகில் பயணம் செய்தவர் கடலில் குதித்து தற்கொலை முயற்சி

(தீவகம்)

குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவு நோக்கி சென்றுகொண்டிருந்த படகில் பயணித்த இளைஞரொருவர் திடீரென கடலில் குதித்த சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக்காலை 10.00 மணியளவில் படகுப் பயணத்திற்கான அங்கிகளை அணிந்துகொண்டு படகில் பயணத்தை மேற்கொண்ட மக்களில் குறித்த நபர் அங்கிகளைக் கழற்றிவிட்டு திடீரென படகிலிருந்து குதித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

15 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்.நகரில் படைகளின் சாகசம் பார்ப்போரை வியக்க வைத்தது








(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரதும், இராணுவப் பொலிஸாரினதும் வியத்தகு சாகச நிகழ்வுகளுடன் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இராணுவத்தினரின் மூன்று நாள் சாகச நிகழ்வுகள் நேற்று விமரிசையாக ஆரம்பமாகியது.

இராணுவத்தினரது பிரமாண்டமான தயார்ப்படுத்தலின் கீழ் நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகிய இச்சாகச நிகழ்வு கண்காட்சிக்கு இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய பிரதம அதி தியாகக் கலந்து கொண்டதுடன், யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்விற்கு வருகை தந்த இராணுவத் தளபதியை யாழ்.அரச அதிபர் வரவேற்று நிகழ்விடத்திற்கு அழைத்துச் சென்றதுடன், இராணுவத் தளபதிக்கு செங்கம்பள வரவேற்பும் வழங்கப்பட்டது.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வாக விமானப்படையின் எம்.ஐ.17 ரக உலங்கு வானூர்தியில் இருந்து 12 இராணுவ வீரர்கள் பரசூட் மூலமாகக் குதித்து துரையப்பா விளையாட்டரங்கில் வந்திறங்கியமை அனைவரையும் வியப்பில் ஆழத்தியது. அது மட்டுமன்றி தேசியக்கொடி, இராணுவக் கொடி, படைப்பிரிவுகளது கொடி, வடமாகாணக் கொடி என்பனவற்றைத் தாங்கியவாறு அவர்கள் வந்திறங்கியது அனைவரையும் ஈர்த்திருந்தது.

அதனையடுத்து இராணுவ வீரர்களது அணிவகுப்பு நடைபெற்றது. அதில் 352 வீரர்கள் பங்கேற்றிருந்தமை பிரமாண்டமாக இருந்தது.

இவற்றுக்கு மேலாக இராணுவ மோப்பநாய்களின் சாகச நிகழ்வுகள் அனைவரது மனங்களையும் கொள்ளை கொண்டது.

தொடர்ந்து இராணுவப் பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் சாகச நிகழ்வுகள் இடம்பெற்றது. பல்வேறு விதமாக பல்வேறு கோணங்களில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்து அவர்கள் தமது சாதனைகளை வெளிக்கொணர்ந்தனர்.


அவ்வாறு சுமார் 20 பேரைச் சுமந்து சாகசம் நிகழ்த்தியமை பார்ப்பதற்கு வியப்பாக இருந்தது.

இதேவேளை, நிரையாக பதினைந்து வாகனங்களை நிறுத்தி அவற்றின் மீது பாய்ந்து இராணுவப் பொலிஸார் ஒருவர் நிகழ்த்திய சாகச சாதனை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

பெருமளவு மாணவர்கள், பொதுமக்கள், படையினர், அரச அதிகாரிகள் பிரசன்னமாயிருந்து நேற்றைய கண்காட்சியினைப் பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இச் சாகசக் கண்காட்சி இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது. (பா)

## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



ஒன்பதாவது பிறந்த நாள்

**பெயர்: அன்பு அனுசியன்**
**கலை ஒளி வீதி,**
**சிறுப்பிட்டி தெற்கு,**
**நீர்வேலி.**

**வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்**

**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2011**

**கலைமுதற் தேர்வு - 2010 (வெளிவாரி)**

**மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்**

கலை முதற் தேர்வு - 2009 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 16.04.2012 (திங்கட்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள்பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா.200/= ஆகும். யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா. 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= இற்கான காசுக் கட்டளை / தபால் கட்டளை சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
22.03.2012

(C/1548)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**புறநிலைப் படிப்புக்கள் அலகு**

**Extra - Mural Studies Unit**
**University of Jaffna**

**பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு பின்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்களைத் தகுதியானவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. விரிவுரைகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை நடைபெறும். 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் இப்பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

பதிவுக்கட்டணம் ரூபா 500

பயில விரும்புபவர்கள் முகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தங்களின் சுயவிபரக்கோவையினை இணைத்து இணைப்பாளர், புறநிலை படிப்புக்கள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி பதிவினை மேற்கொள்ளலாம்.

பாடநெறிகளைப் பயில விரும்புபவர்கள் எத்தனை பாடநெறிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும். ஆயினும் ஒரே நேரத்தில் ஒரு பாடத்துக்கே அனுமதிக்கப்படுவார்.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் திகதி 21.04.2012

01. தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (English for Communication)
02. அலுவலர்களுக்கான ஆங்கிலம் (English for the Office Staff)
03. முன்பள்ளிக் கல்வி (Pre School Education)
04. அலுவலக முகாமைத்துவம் (Office Management)
05. மனித உரிமைகள் (Human Rights)
06. மனிதவள முகாமைத்துவம் (Human Resources Management)
07. சிறுதொழில் முகாமைத்துவம் (Small Business Management)
08. தாதிப்பராமரிப்பும் முதலுதவியும் (Nursing and First aid)
09. விசேட தேவையுடையவர்களுக்கான கல்வி (Education for Special needs)
10. சோதிடக்கலை (Astrology)

மேற்படி பாடநெறிகளில் தகுதியும் திறமையும் படைத்தவர்கள் போதனாசிரியர்களாகப் பணியாற்ற விரும்பின் தங்களுடைய துறைசார் திறமைகளை உறுதிப்படுத்தக்கூடியவாறு தங்கள் பற்றிய சுயவிபரக்கோவையினை இணைப்பாளர், புறநிலை படிப்புக்கள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

இணைப்பாளர்,
புறநிலைப் படிப்புக்கள் அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C/1340)

## புதிய நிர்வாகத் தெரிவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வணிகர் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வணிகர் கழகத் தலைவர் அ. வேதாரணியபிள்ளை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு கழக அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

## சிங்கர் வெற்றிக்கிண்ண கரப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பிரதேச மட்ட சிங்கர் வெற்றிக் கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடர் இன்றைய தினம் உடுப்பிட்டி நவஜவன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

போட்டியில் பங்குகொள்ளும் வடமராட்சி பிரதேசத்திற்குட்ட அனைத்து அணிகளையும் குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டி தங்குதடையின்றி இடம்பெற ஒத்துழைப்புத் தருமாறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (93)


## சிறு விளம்பரங்கள்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1326)

**கணினி திருத்தம்**
**(Computer Repair)**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1327)

சொர்க்கம் வேண்டும் என்பதற்காக இறைவனைத் தொழுபவன் ஒரு வியாபாரி. நரகத்தில் இருந்து விடுபட இறைவனை வேண்டுபவன் ஒரு கோழை. இறைவனுக்காக மட்டுமே இறைவனை வழிபடுபவனே உண்மையான பக்தன்.

- இமாம் கஸ்ஸாலி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## தர்மத்துக்கு வணங்கி உரிமை கோருதல்!

முதலில், ஜெயமோகன் உரையொன்றில் சொல்லியிருக்கும் ஒரு சீனக் கதை.

கொடுமையே உருவான செங்கிஸ்கான் சீனா மீது படையெடுத்துச் சென்றான். குதிரைப் படையினர் துரத்த குழந்தைகளை அள்ளிக்கொண்டு ஓடும் பெண்களைக் கண்டான். இடையில் ஒரு குழந்தையைத் தூக்கி மூத்த குழந்தையை ஓடவிட்டு ஓடிய ஒரு தாயை அவன் கண்டான். ஓடிய குழந்தை காலிடறி விழுந்தது. இடையிலிருந்த குழந்தையைக் கைவிட்டு பெரிய குழந்தையைத் தூக்கிக் கொண்டு அவள் ஓடினாள்.

அவளை இழுத்துவரச் சொன்னான் செங்கிஸ்கான்.

"நீ விட்டுவிட்டு ஓடியது உன் பக்கத்துவீட்டுப் பெண்ணின் குழந்தையைத்தானே? உண்மையைச் சொல்" என்றான் மன்னன் கத்திமுனையில்.

"இல்லை அரசே! நான் விட்டுச் சென்றதுதான் என் குழந்தை. இது இறந்துபோன பக்கத்து வீட்டுக்காரியின் குழந்தை. அவளுக்கு நான் வாக்குறுதி அளித்திருந்தேன்" என்றாள் அப்பெண். "என் குழந்தை கடவுள் அளித்தது. இந்தக் குழந்தையை அளித்தது தர்மம். கடவுளை விடப் பெரியது தர்மம்."

"தாயே" என்று செங்கிஸ்கான் தலைவணங்கினான். "இந்த மண்ணை நான் ஒருபோதும் வெல்ல முடியாது" என்று அவன் திரும்பிச் சென்றதாகக் கதை.

இந்த அறத்தை தர்மத்தை எங்கோ நாம் தவற விட்டிருக்கிறோம் என்பது மட்டுமல்ல, மற்றவர் மனங்களைத் தேட முற்படாமல் நம் சுய இரக்கங்களையே சொல்லிப் புலம்பியும் வருகிறோம். நாம் கொடூரமாகத் துடித்ததையும், அனுபவித்த துன்பங்களையும் சொல்லி, மற்றவர்களிடம் குற்றவுணர்வை மனிதாபிமானத்தை யாசிக்கிறோம். அதில் ஒரு பாதிக் கணப்பொழுது கூட, மற்றவர்களுக்கு நம்மால் நேர்ந்த துன்பத்தையும் பயவுணர்வையும் கேட்டுக்கொள்ள வேண்டும் என்பதை நினைப்பதற்கு நாம் தயாரில்லை.

இந்தியா அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவளித்ததன் மூலம், இலங்கையை சீனாவின் பக்கம் மேலும் தள்ளிவிட்டிருப்பதையே செய்திருப்பதாக இந்திய ஆங்கில ஊடகங்கள் எழுதுகின்றன. சீனாவுக்கே வசதி செய்து கொடுத்திருக்கிறது இந்த முடிவு என்று அவை விமர்சித்துள்ளன.

நம்முடைய தமிழ் ஊடகங்கள் இந்த விமர்சனத்தைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாமல், இந்திய ஊடகங்கள் எப்படி ஈழத் தமிழ் மக்கள் பட்ட துன்ப துயரங்களைப் பற்றிப் பேசாமல், அல்லது புறக்கணித்துவிட்டுத் தங்களது அரசின் முடிவைக் கண்டிக்கின்றன என்று கேட்டுப் பொங்குகின்றன. மனிதநேயம், மனித உரிமை குறித்த அக்கறை உள்ளவர்கள் யாராக இருந்தாலும் இலங்கையில் நடந்த கொடூரத்திற்குத் துடித்துப் போவார்கள்; இந்தியாவின் முடிவைக் கண்டிக்க மாட்டார்கள் என்று எழுதுகின்றன.

சிறுபிள்ளைத்தனம் போன்ற இந்தச் சுயஇரக்க சுபாவமே நம்மை யதார்த்தத்தை எதிர்கொள்ள விடாமல், வெறுமனே உணர்ச்சிகரமாகப் பொங்கிப் பொங்கியே தோற்றுப்போகச் செய்கிறது போலும். அளவில் வேறுபட்டிருக்கலாமே தவிர நாமொன்றும் மற்றவர்களைத் துன்பப்படுத்தாத மனிதநேயக் கொழுந்துகளல்ல என்னும் வெளியுலகப் பார்வை பற்றி ஏன் நாம் அக்கறைப்படுவதில்லை.

அதுபற்றி யாராவது பேசினால், அதற்கு மேலாக எங்கள் துன்பங்களை உரத்துச் சொல்லுவதுதான் அறமா? எங்களுக்கு நேர்ந்த துயரகதியை, இழப்புகளை இன்று உலகம் அனைத்தும் அறியும். எங்கள் தரப்பில் உண்டான தவறுகளுக்கு நாங்கள் கேட்கும் மன்னிப்பையும் மனம் வருந்துவதையும் அவர்கள் அறிய வேண்டாமா?

பல்லாயிரம் கொலைகளைச் செய்தவன் குற்றவாளியாகும் போது ஒருசில கொலைகளைச் செய்தவன் தப்பைப் புறக்கணித்து விடலாம் என்பது என்ன வகையான தர்மம்? தர்மத்துக்குத் தலைவணங்கி நம் நியாயத்தை உரிமையைக் கோர வேண்டாமா?

- ஆசிரியர்

# இலங்கைக்கு ஆயுத, தளபாட ஏற்றுமதி கட்டுப்பாட்டை தளர்த்தியது அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கைக்கு வான்வழி மற்றும் கடலோர கண்காணிப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை அமெரிக்கா தளர்த்தியது.

ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா மனிதஉரிமைகள் குழுக் கூட்டத் தொடருக்குப் பின்னதாக இந்தக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் என்பவற்றுக்கான பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளது.

ஏற்றுமதி கட்டுப்பாடுகள் 1980 களில் உள்நாட்டுப் போர் தொடங்குவதற்கு முன்னரே இலங்கை - அமெரிக்காவிற்கு இடையில் கொண்டுவரப்பட்டன. புதிய விதிவிலக்குகளின் படி ஆயுதமற்ற ரோந்துப் படகுகள், ஒளி விமானம், கமராக்கள் மற்றும் இவற்றுடன் இணைந்த பொருட்கள் என்பன ஏற்றுமதிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

# கல்வித்தர உத்தரவாதம் உறுதிப்படுத்த அறிவுறுத்து

(கொழும்பு)

இலங்கை பாடசாலைக் கல்வியின் தர உத்தரவாதத்தை உறுதிப்படுத்துமாறு வலயக் கல்விப் பணிமனைகளில் அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு நடைபெற்றிருந்த செயலமர்வில் அறிவுரை வழங்கியுள்ளார்.

நாட்டில் உள்ள வலயக் கல்விப் பணிமனைகளில் அபிவிருத்திக்குப் பொறுப்பாகவுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிற்கென நடைபெற்றிருந்த "முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு" செயலமர்விலேயே இந்த அறிவுரையினை கல்வி அமைச்சர் வழங்கியுள்ளார்.

இந்த செயலமர்வு இம்மாதம் 19 ஆம் திகதி கல்வி அமைச்சில் கல்வி அமைச்சரின் தலைமையில் நடைபெற்றிருந்தது. இச்செயலமர்வில் அவர் மேலும் தெரிவித்திருந்ததாவது,

பாடசாலைக் கல்விக்கென அரசு பெரும்தொகைப் பணத்தை பல்வேறு தேவைகளுக்கும் வருடாவருடம் ஒதுக்கி வருகின்றது. இதில் குறிப்பாக வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளிற்கு பல கோடி ரூபா செலவு செய்யப்படுகின்றன. இதன்நோக்கம் கல்வியின் உத்தரவாதத்தை உறுதிப்படுத்திக் கொள்வதாகும்.

எனவே பாடசாலைகள் உள்ளக மதிப்பீடுகளை ஒழுங்காக சரியான முறையில் மேற்கொள்வதை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்பார்வை செய்து நம்பகமான அறிக்கைகளை மாதாமாதம் கல்வியமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

அவ்வாறே வலயக் கல்விப் பணிப்பாளர்களும், பாடசாலைகள் தோறும் சென்று வெளிவாரி மதிப்பீட்டினை முறையாக மேற்கொண்டு கல்வியின் உத்தரவாதத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தரமான கல்வியே தரமான, வளமான நாட்டிற்கு தேவையென்பதை நாம் உணர்ந்து செயற்படவேண்டும் என தெரிவித்தார். (06)

# 73 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

தமிழக அகதிமுகாம்களில் தங்கியிருந்த 73 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து தமிழக அகதி முகாம்களில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

நாடு திரும்பிய இலங்கையர்களில் 24 ஆண்களும் 21 பெண்களும், சிறுவர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விமான நிலையத்தில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர்களை அதிகாரிகள் விடுவித்ததாகத் தெரியவருகிறது.

# இரண்டாம் நிலைக் கல்வி கற்கைத்துறைகளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள பாடசாலைகளின் இரண்டாம் நிலைக் கல்வியமைப்பில் 2013ஆம் ஆண்டு முதல் கற்கைத்துறைகளில் மாற்றங்கள் இடம் பெறவுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

பெப்ரவரி மாதம் கல்வியமைச்சின் தலைமையில் கல்வியமைச்சில் நடைபெற்றிருந்த மாகாணக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) ஆகியோருக்கு நடைபெற்றிருந்த கூட்டத்திலே இந்தப் புதிய கற்கைத்துறைகள் தொடர்பான மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த மாற்றத்தின் படி 2013ஆம் வருடம் முதல் தரம் 10 வகுப்பில் இருந்து விஞ்ஞானம், கணிதம், கலை, வர்த்தகம், தொழில்நுட்பத்துறை, என ஐந்து துறைகளில் பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த ஐந்து துறைகளுமே பாடசாலைக் கல்வியில் முக்கியமான கற்கைத் துறைகளாக விளங்கவுள்ளன. இத்தகைய கற்கைத்துறைகளைக் கொண்ட பாடசாலைகள் ஒவ்வொரு 5 கிலோமீற்றர் தூரங்களிற்கு இடையிலும் ஒவ்வொன்று அமைக்கப்படவுள்ளன.

இத்துறைகளிற்கு ஏற்ப பாடசாலை உள்கட்டமைப்பு வசதிகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்தச் சீர்திருத்தம் 1978 ஆம் ஆண்டுக்கு முந்திய பாடசாலைக் கல்வியமைப்பில் இருந்த கற்கைத்துறைகளைப் போன்றதாகும் என கல்வியாலாளர்கள் தெரிவித்துள்ளனர். (06)

# பொலிஸ் அதிகாரியால் உறுதிமொழி கைவிடப்பட்டது வவுனியா பகிஷ்கரிப்பு

(வவுனியா)

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் உறுதிமொழியை அடுத்து வவுனியா நகர சபையினரின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டுள்ளது.

வீதியோரக் கடைகளை அகற்றல் தொடர்பில் நீதிமன்ற அனுமதியைப் பெற ஆவன செய்வதாக தெரிவித்ததை அடுத்து வவுனியா நகர சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

வவுனியா நகர சபையின் மாதாந்த கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றுக் கொண்டிருந்த போது அனுமதியின்றி பொலிஸ் உத்தியோகத்தர் உள்நுழைந்தமை மற்றும் சபையினால் தடுக்கப்பட்ட வீதியோர வியாபாரத்திற்கு பொலிஸார் அனுமதி அளித்தமை ஆகியவற்றிக்கு கண்டனம் தெரிவித்து நகர சபையினர் நேற்று முன்தினம் காலை முதல் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை மேற்கொண்டனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் மாலை வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.

இதன்போது, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் வழங்கப்பட்ட உறுதிமொழியினை அடுத்தே பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது.

இதேவேளை, வவுனியா நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் அனுமதியின்றி நுழைந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கூட்டத்தின் போது கோரிக்கை விடுத்ததாக வவுனியா நகர சபை உறுப்பினர் எஸ்.ரி.இராஜேஸ்வரன் தெரிவித்தார். (125)

## பணிநயப்பு விழா

(வடமராட்சி)

வடமராட்சி மக்களும் வடமராட்சி பொது அமைப்புக்களும் இணைந்து வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலராகக் கடமையாற்றி வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பதவி உயர்வு பெற்ற எஸ்.சத்தியசீலனுக்கான பணிநயப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் யாழ்பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையை நெல்லியடி முருகன் கோயில் ஆலய குருக்கள், கரவெட்டி பங்குத்தந்தை ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரைகளை யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் முன்னாள் வடமாகாண பிரதம செயலாளர் ஆர். சிவசுவாமி ஆகியோர் வழங்கவுள்ளனர். (109)

# யாழ். மாநகர சபைக்குட்பட்ட வீதிகள் 65 மில்லியன் ரூபாவில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (நெல்சிப்) கீழ் யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட 9 வீதிகள் 65 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

இந்த உபகருத்திட்டத்தை அமுலாக்குவதற்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணையத் தலைவரும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்படி ஜே/109 கிராம அலுவலர் பிரிவிக்குட்பட்ட செட்டியார் தோட்டவீதிகள் புனரமைத்தலும், மதகு அமைத்தலும் முருகேசர் வீதி புனரமைப்பு 8 மில்லியன் ரூபாவிலும் ஜே/87 கிராம அலுவலர் பிரிவிக்குட்பட்ட ஜின்னா வீதி, அசாப் வீதி, காதி அபூபக்கர் வீதி, ஜதுரிஸ் மக்கா வீதி, வீதிகள் திருத்தமும், வடிகால்கள், மதகுகள் திருத்தம் ஆகியன 8 மில்லியன் ரூபாவிலும் ஜே/ 83 கிராம அலுவலர் பிரிவிக்குட்பட்ட மாவடி வீதி, கமால் வீதி, வைரவர் கோவில் கற்குளம் வீதி, வடிகால் திருத்தம் 7 மில்லியன் ரூபாவிலும் - ஜே/ 92 கிராம அலுவலர் பிரிவிக்குட்பட்ட பாரதி வீதியும், உப ஒழுங்கைகளும் ஸ்ரான்லி ஒழுங்கை, பேரின்பநாயகம் வீதி, திருத்தம் 7 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கவுள்ளது.

ஜே/97 கிராம அலுவலர் பிரிவிக்குட்பட்ட ஓடை வீதி, சிவப்பிரகாசம் வீதி, தலையாழி ஒழுங்கை, கல்லூரி ஒழுங்கை, வீதிகள், வடிகால் திருத்தம் 8 மில்லியன் ரூபாவிலும் ஜே/70 கிராம அலுவலர் பிரிவிக்குட்பட்ட கொண்டடி வீதி, சின்னக்கடை 4 ஆம் குறுக்குவீதி, குருநகர் தண்ணீர்த் தாங்கி 1 ஆம் 3 ஆம் குறுக்கு வீதிகள், வடிகால் புனர மைப்பு 7 மில்லியன் ரூபாவிலும் ஜே/74 கிராம அலுவலர் பிரிவிக்குட்பட்ட மடம் வீதி, மத்தியூஸ் வீதி, வடிகால்கள் புனரமைப்பு 6 மில்லியன் ரூபா புனரமைக்கப்படவுள்ளது.

ஜே/63 கிராம அலுவலர் பிரிவிக்குட்பட்ட சுவாமியார் வீதி உப்புக்குளம் வீதி குறுக்கு வீதிகள் றெக்கிளமேசன் வீதி, புனரமைபபு 7 மில்லியன் ரூபாவிலும், ஜே/102 கிராம அலுவலர் பிரிவிக்குட்பட்ட ஆத்திசூடி இந்து மகளிர் ஒழுங்கை ஞானவைரவர் முன் ஒழுங்கை ஆத்திசூடி கன்னியர்மடம் வீதி, ஆகியன 7 மில்லியன் ரூபாவிலும் புனரமைக்கப்படவுள்ளது.

## முதியோர்களுக்கு விசேட சிகிச்சை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேசத்திலுள்ள முதியோர்களுக்கு பரதி சனிக்கிழமைகளில் அவாகளின் வீடுகளுக்குச் சென்று சிகிச்சை வழங்குவதற்கு முல்லைத்தீவு பிரதேச வைத்திய அதிகாரி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இப்பிரதேசத்தில் வாழும் முதியோர்களில் வைத்தியசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் வாழும் முதியோர்களை இனங்கண்டு அவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு இருக்கும் முதியோர்கள் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.(04)

# சட்டவிரோத மீன்பிடி இருவருக்கு அபராதம்

(திருநெல்வேலி)

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கடலில் டைனமற் பாவித்து மீன்பிடித்ததாக எட்டு மீனவர்களுக்கும் மற்றும் இரணடு வாகன ஓட்டுநர்களுக்கும் எதிராக யாழ். நீதிமன்றத்தல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின்போது மீனவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எட்டு மீனவர்களில் இரண்டு மீன வர்களுக்கெதிராக வழக்கை கொண்டு நடாத்தி ஏனைய ஆறு மீனவர்களையும் விடுதலை செய்வதற்கு வழககு தொடுநர் தரப்பு உடன்பட்டால் இரண்டு எதிரிகளும் குற்றத்தை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருப்பதாக சமர்ப்பித்தார்.

கடற்தொழில் நீர்வளத் திணைக்களத்தின் சார்பாக ஆஜரான சட்டத்தரணி அமிர்தா இதற்கு உடன்பட்டதையடுத்து இரண்டு மீனவர்களுக்கும் நீதவான் மா.கணேசராஜா தலா ஐம்பதினாயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

ஏனைய ஆறு மீனவர்களும் டைனமற் வைத்து பிடிக்கப்பட்ட மீன்களை வாகனத்தில் ஏற்றிச் சென்ற இரண்டு வாகனச் சாரதிகளும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். எதிரி தரப்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸ ஆஜரானார். (137)

# சாமஶ்ரீ விருதிற்கு யாழ். இளைஞன் தெரிவு


(யாழ்ப்பாணம்)

சமய, சமூக, கலை, கலாசாரம் போன்ற பொதுச் சேவையில் ஈடுபட்டவர்களுக்கு அகில இலங்கை நல்லுறவு ஒன்றியத்தினால் வழங்கப்படும் சாமஶ்ரீ தேசிய கீர்த்தி என்னும் தேசிய விருதுக்கு யாழ் இளைஞன் மரியநாயகம் சுபீட்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சென்ஜோசப் வித்தியாலயம், சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் யாழ் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ இளமாணிப்பட்டம் பெற்றவராவார்.

யாழ்ப்பாணம் மக்கள் வங்கியின் பிரதான வீதிக்கிளையில் வங்கி உத்தியோகத்தராக கடமையாற்றிவரும் இவருக்கு இன்று காத்தான்குடி ஹிஸ்புல்லா கலாசார வரவேற்பு மண்டபத்தில் நடைறும் விருது வழங்கும் விழாவில் மகளிர் விவகார சிறுவர் பராமரிப்பு பிரதியமைச்சர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.





வலிதெற்கு பிரதேச சபை உடுவில் பொது நூலகத்தின் 47 ஆவது ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஶ்ரீராணி மில்ஸ் உரையாற்றுவதையும், மாணவியின் நடன நிகழ்வையும், நிகழ்வில் கலந்துகொண்டோரின் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# பனைசார் கைப்பணி பயிற்சி நிலையம் மன்னார் சாவற்கட்டில் திறப்பு



(மன்னார்)

மன்னார் சாவற்கட்டுப் பகுதியில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயறசி அபிவிருத்தி அமைசசின் கீழ் உள்ள பனை அபிவிருத்திச் சபையினால் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் யுவதிகள், பெண்களுக்கான பனை சார் கைவினைப் பொருள் உற்பத்திப் பயிற்சி நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகள் சாவற்கட்டு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி ஆர்.சுசிலாதேவி தலைமையில் முற்பகல் 11.00 மணியளவில் ஆரம்பமானது.

ஆரம்ப வைபவத்தில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம், மன்னார் மாவட்ட பணிப்பாளர். எஸ்.சந்துரு, மாவட்ட இணைப்பாளர் எம்.சிறிதரன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மன்னார் மாவடட அமைப்பாளர் எஸ்.திசவீரசிங்கம் (லிங்கேஸ்) மற்றும் பனை அபவிருத்திச் சபையின் மன்னார் மாவட்ட அலுவலக ஊழியர்கள், போதனாசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வில் உரை நிகழ்த்திய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் லிங்கேஸ் அவர்கள் தமதுரையில், நான் பிறந்த இந்த ஊரில் இந்த பயிற்சி ஆரம்பிக்கப் படுவது மகிழ்ச்சியைத் தருகிறது. மேலும் கடந்த 2009 ஆம் ஆண்டு எமது வேண்டுகோளுக்கு இணங்க பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இப்பகுதிக்கு விஜயம் செய்து பல் வேறு உதவிகளை வழங்கியிருந்தார். எனினும் எமக்கான அரசியல் பலத்தை இப்பகுதி மக்கள் வழங்கத் தவறியிருந்த போதும், நாம் பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து மேற்கொண்ட முயற்சியின் பலனாகவே இன்று இந்தப் பயிற்சி நெறி ஆரம்பிக கப்படுகிறது. எனவே இதனை சரியா கப் பயன்படுத்தி நீங்கள் பலன் பெற வேண்டும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றிய ஈழ மக்கள் ஜனநாய கக் கட்சியின் மன்னாரர் மாவட்ட பிரதி அமைப்பாளரும், பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளருமான எஸ்.சந்துரு தமதுரையில், வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கான வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கோடு உருவாக்கப்பட்டுள்ள பனைசார் உற்பத்திப் பயிற்சி நெறிகள் உங்களுக்கு வழங்கப்படுவது, உங்களது சுய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு தரப்படும் ஒரு ஊக்குவிப்பாகும் எனத் தெரிவித்தார்.

## ஆளுநர் மாநாடு இம்முறை யாழில்

இந்த வருடம் ஆளுநர்களின் மாநாடு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடாத்தப்படவுள்ளதாக உள்ளூராட்சி சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனை ஒட்டி யாழ். நூல் நிலையத்தை மேலும் மெரு கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்கென வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்களால் பத்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் படடிருப்பதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ். நூல் நிலையத்தில் அதன் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக வட மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆளுநர் அவ் விடயம் குறித்த பட்டியலொன்றையும் தமக்கு சமர்ப்பிக்கும் படியும் மாநகர முதல் வரைக் கோரியிருப்பதாகவும் தெரியவருகின்றது.(பா)

# போட்டியில் பங்குபற்றாத நிலை; மாணவர்களுக்கு மன உளைச்சல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் மாவட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டிக்கு தபால் திணைக்கள அடையாள அட்டையின்றி தோற்றமுடியாது மன உளைச்சலுக்கு ஆளாகிய சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இக்கல்லூரி மாணவர்கள் போட்டிக்காக பலத்த சிரமங்களின மத்தியில் கல்விச்செயற்பாடுகளை இடைநிறுத்தி உடற்பயிற்சியில் ஈடுபட்டனர் அத்துடன் பணத்தைச செலவு செய்து போட்டிக்கு தோற்ற முடியாமல் அவர்கள் மன வேதனையடைந்ததாக பழைய மாணவர் களும், பெற்றோர்களும தெரிவித்தனர்.

போட்டியில் பங்குபற்றுவதற்கு மேற்படி அடையாள அட்டை தேவை என அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் இவற்றில் பாடசாலைச் சமூகத்தினர் கவனம் செலுத்தவில்லை எனவும் இதனால் மாணவர்கள் பெரும் பாதிப்படைந்ததாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரபலமான இப்பாடசாலையில் இவ்வாறான தவறுகள் இடம் பெறுவதைத் தவிர்த்து பாடசாலை சமூகத்தினர் எதிர் காலத்தில் மாணவர்களின் கல்வி விளையாட்டுச் செயற்பாட்டில் அக்கறை செலுத்த வேண்டும் என பழைய மாணவர் களும், பெற்றோர்களும கேட்டுக் கொள்கின்றனர். (77)

# சமூக பாதுகாப்பு ஓய்வூதியம்; மக்களுக்கு தெளிவு அவசியம்

## -யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார்

(யாழ்ப்பாணம்)



யாழ்.குடாநாட்டில் வறுமைக கோட்டிற்கு கீழ் வாழும் 52 ஆயிரம் குடும்பங்கள் மற்றும் மீள் குடியேற்றம் செய்யப் பட்டிருக்கும் குடும்பங்கள் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழான ஓய்வூதியத்திட்டத்தில் இணைத் துக்கொள்ளப்படாமை ஒரு குறைபாடாகவே இருந்து வருவதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரி வித்துள்ளார். நேற்று முன் தினம் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத்திட்ட அறிமுக நிகழ்வு மற்றும் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத் தின் கீழ் ஓய்வூதியம் பெறுபவர் களுக்கான ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையிலே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்; இந்த ஓய் வூதியத்திட்டத்தின் வளர்ச்சிக்கு கிராம சேவகர்களின் பங்களிப்பு போதாமல் இருக்கின்றது. 1996 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையும் இத்திட்டத்தின் கீழ் இணைத்துக்கொள்ளப்பட் டவர்களில் இருந்து முதற்கட் டமாக 468 பேருக்கு மட்டுமே தற்சமயம் ஓய்வூதியம் வழங்கப் படவுள்ளது.

இவை யாழ்.மாவட்டத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப இல்லாமல் இருப்பது மிகவும் கவனம் செலுத்தப்படவேண்டிய விடயம். எனவே கிராமசேவகர் கள் இத் திட்டம் குறித்து பொது மக்களுக்கு தெளிவாக எடுத் துக்கூறி ஓய்வூதியம் பெறத் தகுதியானவர்களை இணைத் துக்கொள்ள வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், சமூக பாதுகாப்புத் திணைக்கள வடமாகாணப்பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், யாழ்.செயலக கணக்காளர் சண் முகரட்ணம், பிரதேச செயலாளர்கள், யாழ். செயலக அதிகாரிகள் ஆகி யோர் கலந்து கொண்டனர். (பா)

# போதைப்பொருளுடன் புல்லுக்குளத்தில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் - புல்லுக்குளம் பகுதியில் போதைவஸ்து பொருள் விற்பனை செய்ய முயன்ற இரு இளைஞர்கள் நேற்று முன்தினம் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் குறித்த இரு இளைஞர்களும் புல்லுக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இளைப்பாறும் இருக்கையில் அமர்ந்திருந்து வீதியால் சென்ற இளைஞர்களை அழைத்தனர்.

இதன்போது வீதியூடாக சிவில் உடையில் சென்ற பொலிஸார் மேற்படி இருவரையும் மடக்கிப்பிடித்தனர். 8 இலட்சம் ரூபா பெறுமதியான 200 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டது. (எஸ்)

# இந்து மாமன்றத்தினால் இரு நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)


அகில இலங்கை இந்து மாமன்றம் ஆலயம் வெளியீட்டகத்துடன் இணைந்து வெளியிடும் இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் எழுதிய இந்திய மெய்யியற் சிந்தனையில் வேதாந்தம் - சித்தாந்தம் கூறும் கடவுட்கொள்கை, பண்டிதர் த.சுப்பிரமணியம் எழுதிய சைவ புண்ணிய காலம்(மறுபதிப்பு) ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

மாமன்ற வெளியீட்டுக்குழுவின்தலைவரும் அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவருமான பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் தலை மையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்திய வதிவிட இராஜதந்திரப்பிரதிநிதி அ.இராஜமாணிக்கம், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி வசந்தி அரசரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா வழங்கவுள்ளார்.

# பரமர் சங்கமம்



மக்கள் எழுத்தாளர் அமரர் கே.டானியலின் 26ஆவது மறைவாண்டு தினம் நேற்று (23.03.2012) தான் கடந்தது. சிந்தனாவாதிகள், புலவர்கள், ஞானிகள் பாடசாலை, கல்லூரி, பல்கலைக் கழகங்கள் ஊடாகத்தான தோன்றியவர்கள்; தோன்றுவார்கள் என்ற எந்த நியதிகளும் இல்லையல்லவா?

அது போல் 1925ஆம் ஆண்டு யாழ்.ஆனைக்கோட்டை, பழம் வீதிப் பகுதியில் சாதாரண குடும்பம் ஒன்றில் தோன்றிய கே.டானியல் அக்காலத்தில் நடைமுறையில் இருந்த திண்ணைக்கல்வி முறையில் ஐந்தாம் வகுப்புவரை கல்வியைப் பெற்றுக்கொண்டவர்.

குடும்ப வறுமை காரணமாக இளமையிலே கல்வியைத்துறந்து அன்றாடத்தொழிலாளியாக மாறினார். மீன் வியாபாரம், சலவைத் தொழில் மற்றும் குளிர்பான விற்பனையாளராக உழைத்த வருவாயில வாழ்கையை நகர்த்தி வந்தவர்.

இளமையில் காந்தியக்கோட்பாடுகள் மனதைக் கவர்ந்ததால் அக்கோட்பாட்டை ஒட்டிய செயற்பாடுகளில் ஈடுபட்டுழைத்தார். அதன் பின்பாக திராவிட முன்னேற்றக்கழக அரசியல் அலைகளில் அலைக் கழிந்தார்.

தோழர் ப.ஜீவானந்தம் மற்றும் கம்யூனிஸ்ட் கார்த்திகேயன் ஆகி யோரது தொடர்புகளால் இடதுசாரிக் கருத்துக்களுடன் ஒன்றிய டானியல் 1986ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி மறையும் வரை அதனில் இருந்து பிசகாமல் செயற்பட்டு வந்தவர்.

முன்னூறுக்கும் அதிகமான சிறுகதைகளையும் பதினைந்துக்கு மேற்பட்ட நாவல், குறுநாவல்களையும் எழுதி ஈழத்து இலக்கியப்பரப்பில் புனைகதைத்துறைக்குச் செழுமை ஊட்டினார்.

சாதி அடக்கு ஒடுக்கு முறைகளால் சிறுவயது முதல் அனுபவித்து வந்த இன்னல்களையும், இடர்பாடுகளையும் அவரது சிறுகதைகள், நாவல்கள் பெரும்பாலும் சித்தரித்துள்ளன.

'பஞ்சமர்' 'கானல்' 'கோவிந்தன்' பஞ்சகோணங்கள்' 'தண்ணீர்' போன்ற இன்னும்பல நாவல்களையும், டானியல்கதைகள், சிறுகதைகள் அடங்கிய மற்றுமொரு விரகேசரி பிரசுரமான நூல்களையும் தமது எழுத்தாக்கங்களாகப் படைத்துள்ள டானியலுக்கு இலங்கை சாகித்திய மண்டலம் இருதடவை பரிசளித்துக் கௌரவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பரமரைப்போன்ற பல படைப்பாளிகளை மக்கள் கலை, இலக்கியப் பெருமன்றம் அமைத்து அதனூடாக மக்கள் இலக்கியம் காலாண்டு சிற்றிதழ் மூலமாக வழிப்படுத்தி வளர்த்துவிட்ட பெருமையும் அமரர் டானியலைச் சாரும்.

அப்பொழுதெல்லாம் யாழ்.வெலிங்டன் சந்தியில் அமைந்துள்ள 'ஸ்ரார் றேணிங் வேக்ஸ்' இரவு பத்து மணிவரையில் இலக்கியக் காரர்கள் வந்து சேர்கின்ற காரணத்தினால் அங்கே போடப்பட்டிருந்த வாங்கில்கள் சங்கப்பலகைகள் என வர்ணிக்கப்பட்டதுண்டு.

யாழ்.நகரில் அக்காலங்களில் நடைபெறுகின்ற இலக்கிய கூட்டங்கள் முற்போக்கு அணி, இலக்கியவட்ட அணி ஆகியன சங்கமித்துக் கருத்துப் பரிமாறல்களால் களை கட்டிய நிலைமைகளெல்லாம் இப்போழுது இல்லை.

டானியல் இலக்கியப்படைப்பாளி மட்டுமல்ல போராளி எனவும் வர்ணிக்கப்பட்டவர். அத்தகைய பிறப்புக்களை இனி எந்தக்காலந்தான் காணப் போகிறோமோ தெரியேல்ல....

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான மூன்றாவது மார்ச் மாத மாதாந்த பொதுக் கூட்டம் எதிர் வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள் ளதாக யாழ்.மாநகரசபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# மீள்குடியேற்றத்துக்கு பதிவு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இது வரை மீள்குடியேறாத மக்களை பதிவு செய்யுமாறு பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இந்த பிரதேச செயலர் பிரிவில் உள்ள இதுவரை விடுவிக்கப்படாத இத்தாவில், வேம்பெடுகேணி, முகமாலை போன்ற பிரதேசங்களை நிரந்தர இடமாகக் கொண்டு தற்போது வேறு பிரதேசங்களில் தற்காலிகமாக வசிப்பவர்கள், இப்பிரிவுகள் விடுவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மீள் குடியேற தயாராக உள்ளவர்கள் தங்கள் பெயர் விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# முரசின் இன்றைய பலன்

(24.03.2012 -சனிக்கிழமை)

கர வருஷம் பங்குனி மாதம் 11 ஆம் திகதி. துதியை பின்னிரவு 2.06 வரை.
நட்சத்திரம் ரேவதி மரணயோகம் பிற்பகல் 3.07 வரை.
இராகுகாலம் 9.15 - 10.45 வரை. சுபநேரம் 3.15 - 4.45 வரை.
எமகண்டம் 1.45 - 3.15 வரை. குளிகை காலம் 6.15 - 7.45 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | செலவு அதிகரிப்பு, சேமிப்பு உயரும், உறவினர் அனுசரணை, நினைத்தது கிடைக்கும். |
| ரிஷபம் | திருப்திகரம், பிணைபோகவேண்டாம், செல்வந்தர் நட்பு, நீண்டகால கனவு நிறைவேறும். |
| மிதுனம் | மன உறுதி, சேமிப்பு உயரும், உடல்நல பாதிப்பு, விரும்பிய இடமாற்றம். |
| கடகம் | தொழில் வளம், விருந்துபசாரம், உறவினர் அனுசரணை, திருமணம் கூடிவரும். |
| சிம்மம் | நிதானம் தேவை, மனதில் சோர்வு ஏற்படும், சகோதரவழியால் உதவி, சுற்றுலாப்பயணம். |
| கன்னி | சந்திராட்டமம் உஷார், உறவினரால் செலவு, கடன்பட நேரிடும், சகோதரர் உதவி. |
| துலாம் | நண்பரால் நன்மை, உடல் உபாதைகள், வாக்குவாதம், கல்வியில் மந்த நிலை. |
| விருச்சிகம் | உல்லாசம், புத்திரப்பேறு, பெற்றோரால் உதவி, குடும்ப அன்பு நீடிக்கும். |
| தனுசு | புத்தி மேன்மை, மறைமுக வருவாயில் க்வனம், பூர்வீக சொத்தில்மாற்றம், பிணை போக வேண்டாம். |
| மகரம் | தானம் செய்தல், கூட்டுத்தொழிலில் மனஸ்தாபம், உறவினருடன் கருத்து வேறுபாடு. |
| கும்பம் | அன்பு பெருக்கம், மனைவி வழியில் சுப காரியம், மருத்துவச்செலவுகள், வேலைப்பளு. |
| மீனம் | அந்நியர்உதவி, தடைப்பட்டவை நிறைவேறும், பிரயாணத்தில அவதானம், வெளிநாடு செல்ல வாய்ப்பு. |

# அரசியல் சுயலாபங்களுக்காக நமது மக்களை இன வெறியர்களாக மாற்றியுள்ளனர்

**கல்வி ஊடாக சமரசம் என்ற கருத்தரங்கில் பேராசிரியர் றோகான் குணரத்ன ஆற்றிய உரையிலிருந்து...**

இலங்கையின் வரலாறு செல்லும் திசை நிச்சயமாக மே 19, 2009 இல் மாற்றமடைந்தது. அப்போ திருந்து நல்லிணக்கத்துக்கான பகுதியில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

தேசிய நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளில் எடுத்த முதல் அடிதான் முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின், குறிப்பாக 18 வயதுக்கு உட்பட்டவர்களின் மறுவாழ்வு. சுமார் 12,000 வரையிலான முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ யினர் மறுவாழ்வு நடவடிக்கையில் ஈடுபடுத்தப் பட்டார்கள்.

12,000 பேரில் சுமார் 500 பேர்கள் வரை 18 வயதிலும் குறைந்த சிறுவர்களாக இருந்தனர். அரசாங்கம், அவர்களுக்கு கல்வி வாய்ப்பினை வழங்க முடிவு செய்தது. அநேகமாக அவர்கள் அனைவரும் இரத்மலானை இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றார்கள்.

மறுவாழ்வு வழங்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களில் கிட்டத்தட்ட சில நூறு பேர்கள் வரை பல்கலைக் கழகத்துக்கான அனுமதியைப் பெற்றுள்ளார்கள். அவர்களில் சிலர் மருத்துவக் கல்லூரிக்குச் செல்வதற்கான தகுதியையும் பெற்றிருக்கிறார்கள்.

மறுவாழ்வு வழங்கப்பட்டு சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட இந்த 11.500 புலி உறுப்பினர்களில் ஒருவராவது திரும்பவும் வன்முறைகளில் ஈடுபட மாட்டார்கள் என்று தனிப்பட்ட முறையில் நான் நம்புகிறேன். வன்முறைகளைப் புரிந்ததால், மோதல் என்றால் என்ன என்பதை கண்ணால் கண்டு தனிப்பட்ட வகையில் அனுபவித்தும் அறிந்து கொண்டார்கள். பிரதான நீரோட்டத்தில் இணையும் வாழ்க்கையினையே அவர்கள் முன்னெடுப்பார்கள் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயம்.

வெளிநாட்டிலுள்ள மிகவும் சிறிய அளவிலான தமிழ் சமூகத்தினர் ஒரு நீர்க்குமிழி போன்ற நிலையில் வாழ்கிறார்கள். அவர்கள் நமக்கு மாறுபட்ட மற்றொரு பிரபஞ்சத்தில் வாழ்கிறார்கள் என்றே நான் சொல்வேன். இலங்கையில் என்ன நடந்தது, என்கிற யதார்த்த நிலைமையைப் பற்றிய அனுபவம் அவர்களிடமில்லை. இலங்கையில் வாழ்கின்றவரகளைப் போலல்லாது, வெளிநாடுகளில் வாழ்பவர்களில் ஒரு பகுதியினர், இலங்கையில் மீண்டும் மோதல் வெடிப்பதையே விரும்புகிறார்கள்.

30 வருடங்களாக இடம்பெற்ற மோதல் மிகப் பெரிய சந்தேகத்தையும், மற்றும் அவநம்பிக்கையையும் உருவாக்கியுள்ளது. தெற்கில் எல்.ரீ.ரீ.ஈயினர் மேற்கொண்ட குண்டுமாரிகளும் மற்றும் தாக்குதல்களும், மற்றும் வடக்கில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளும், தெற்கிலும் மற்றும் வடக்கிலும் வாழும் மக்களின் சிந்தனைகளில் முனைவாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

சமூகங்களிடையே பிளவுகள் ஏற்பட்டதுடன் மக்கள் ஒருவர் மீது ஒருவர் தப்பபிப்பிராயங்கள் கொள்ளவும் வழி ஏற்பட்டது. இந்தப் பிளவுக்கு பாலம்



போட்டு இணக்கத்தை ஏற்படுத்த நல்லிணக்கமே சிறந்த உபகரணம்.

நல்லிணக்கமானது, வர்த்தக சமூகம், பல்கலைக்கழகங்கள், மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மற்றும் இதர ஊடகங்கள் மூலமே உருவாக முடியும். கல்வித் துறையைப பொறுத்தமட்டில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் இதுவரை ஏற்பட்ட முனனேற்றங்களை ஒருங்கிணைத்து அதைப் பலப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

இன்று, இலங்கை எதிர்கொள்ளும் அதிக சவாலான விடயம், சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் எனப் பாகுபாடற்ற இலங்கையர்கள் என்கிற சமுதாயத்தை உருவாக்கும் வகையில், கல்வித் திட்டத்தை மறுசீரமைப்பு செய்ய வேண்டியதன் அவசியமாகும்.


நான் வளர்ந்தது ஆனந்தாக் கல்லூரியிலிருந்து, எனது நண்பர்கள் அனைவரும் சிங்களவர்கள், அநேகமாக அவர்கள் அனைவருமே பௌத்தர்கள். எனவே நாங்கள் சிங்களவர்களாகவே வளர்ந்தோம், நாங்கள் இலங்கையர்களாக வளரவில்லை.

இதேபோலத்தான் தமிழ் பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளும் இலங்கையர்களாக இல்லாமல் தமிழர்களாகவே வளர்ந்தார்கள். எங்களிடையே உள்ள சில முஸ்லிம் பாடசாலைகளிலும் இதேநிலைதான் உள்ளது. எனவே பிள்ளைகள் இலங்கையர்களாக வளர்வதற்கு ஏற்ற மாதிரியான ஒரு கல்வி முறையை உருவாக்க வேண்டியது

அவசியம். பல்வேறுபட்ட இனம் மற்றும் மதங்களைச் சேர்ந்த சகோதர சகோதரர்களிடையே வளர்வதன் செழுமையை அறிந்து கொள்வதன் மூலம் அவர்கள் நன்மை அடைவார்கள்.

அவர்கள் தமிழை அல்லது சிங்களத்தை படிக்க ஆரம்பிக்கும் போது, மற்றைய இன அல்லது மத குழுக்கள் வெளிப்படுத்துவதைப் பற்றிய பரஸ்பர அவநம்பிக்கை மற்றும் சந்தேகங்கள் நிச்சயம் அவர்களிடம் தோன்றாது.

திருமதி.பண்டாரநாயக்கா காலமாவதற்கு சில வருடங்களுக்கு முன்பு நான், அமெரிக்காவின் முன்னணி பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர் பேராசிரியர் புறூஸ் கொ.ஃப்மான் அவர்களுடன் சேர்ந்து அவரைச் சந்தித்தேன். அவரிடம் நான் "அம்மணி! இனமோதலுக்கான காரணம் எது" என்று கேட்டேன்? தனது பதிலை மிகத் தெளிவாக "சிங்களம் மட்டும் சட்டம்தான்



அதற்கான காரணம்" என்று சொன்னார். அப்போ நான் சொன்னேன் "அம்மணி, உங்கள் கணவரான எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா அவர்கள்தானே அதை அறிமுகப் படுத்தினார்" என்று. அதற்கு அவர் "ஆம், அதுதான் உண்மை, ஆனால் அது பல வழிகளிலும் நமது நாட்டை கூறு போட்டுவிட்டது" என்றார்.

தற்போதைய அரசாங்கத்தை சேர்ந்தவர்களோ, அல்லது எதிர்க்கட்சியையோ அல்லது ரி.என்.ஏ யை சேர்ந்தவர்களோ எவராயினும், அரசியல்வாதிகள் எப்போதும் அரசியல் வாதிகளாகத்தான் இருப்பார்கள்.

அவர்கள் எப்பொழுதும் விசேடமாக தேர்தல் நெருங்கும்போதும், வாக்குகளைப் பெறுவதற்காக, இனம், மதம் போன்ற சீட்டுக்களை விளையாடத் தொடங்குவார்கள். திடீரென அவர்கள் இலங்கைவாசி இல்லை என்பதைப் போல நடந்து கொள்வார்கள். எங்களது செல்வாக்கு மிக்க சமூகத்தினரிடையே இன மத வேறுபாடுகளை வெளிபடுத்துவதற்கு எதிராக இலங்கை சமூகம் என்பதை உருவாக்க வேண்டியது மிகவும் முக்கியம். நெய்யப்பட்ட பட்டுத்துணியினைப் போன்ற இலங்கை சமூகத்தை, இன மற்றும் மதப் பிரிவினை எனும் சீட்டுக்களை

விளையாடிப் பாழாக்குவதற்கு அரசியல்வாதிகளை நாங்கள் அனுமதிக்கக் கூடாது.

மிகப்பெரிய பாரம்பரியத்தின் வழியாக மரபு வழியாக ஒவ்வொரு இலங்கையனும் பெற்றுவருவது, நல்லுறவேயாகும். துரதிர்ஷ்ட வசமாக தெற்கிலும் மற்றும் வடக்கிலுமுள்ள அரசியல் தலைவர்கள். தங்கள் சுய மற்றும் அரசியல் இலாபங்களுக்காக மக்களின் இன மற்றும் மத உரிமைகளை சுரண்டுகிறார்கள்.

அரசியல்வாதிகள் நமது மக்களை இன வெறியர்களாக மாற்றியுள்ளனர். அதன் விளைவாக தாங்கள் மரபுவழியாக பெற்றுவந்த நல்லுறவை மற்றும அதன் நலன்களை, 30 வருடங்களாக இலங்கை மக்களால் அனுபவிக்க முடியாமல் போய்விட்டது. எங்களது கல்விமுறையால் இலட்சிய இலங்கையர்களை எதிர்காலத்தில் மீண்டும் உருவாக்க முடியும்.

நான் வடக்கிற்கோ அல்லது தெற்கிற்கோ அல்லது கிழக்கிற்கோ விஜயம் செய்தால் என்னால் இனவெறியினைக் காண முடிவதில்லை, ஆனால் கொழும்பிலுள்ள மேல்தட்டு வர்க்கத்தினரிடையே நான் அதிகளவிலான இனவெறித் தன்மையை காண்கிறேன். தலைநகரில் இனவெறி பற்றி குறிப்பிடத்தக்க அளவு பிரசாரம் பரப்பப்பட்டு வருகிறது. அதற்கு மறுதலையாக கிராமப்புறங்களில் வாழும் மக்கள் சமாதானமாக வாழ விரும்புகிறார்கள்.

வன்னியில் உள்ள மக்களிடம் உங்கள் தேவை என்ன என்று கேட் டால், எனக்குப் பாதுகாப்பு தேவை, எனக்கு ஒரு வேலை தேவை, நான் வசிப்பதற்கு ஒரு வீடு தேவை, எனது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்றுதான் அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

சாதாரண மக்கள் எதிர்கொள்ளுவதற்கு முரண்பாடான வகையில், இந்த முக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாக கொழும்பிலுள்ள மேல்தட்டு வர்க்கத்தினர் மற்றும் புத்திஜீவிகள் மத்தியில் பிரதிபலிப்புகளும் மற்றும் விவாதங்களும் இடம்பெறுகின்றன என நான் எண்ணுகிறேன்.

கடந்த 25 - 30 வருடங்களாக நாங்கள் பல தவறுகளைச் செய்திருக்கிறோம், அந்த தவறுகள் உருவாக்கி, அதனால் நிலைபெற்றதுதான் இலங்கையில் ஏற்பட்ட மோதல். நாங்கள் செய்த நல்லவைகளையும் மற்றும் தவறுகளையும் கவனமாக சீர்தூக்கி ஒரு தீர்க்கமான பார்வை பார்ப்பதற்கான நேரம் இதுதான்.

மேலும் சீர்கேடுகள் ஏற்படாமல், அல்லது மோதல் திரும்பவும் இடம்பெறாமல் இருப்பதற்கு, அதே தவறுகளை மீண்டும் செய்யாமல் முன்னேற்றகரமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

# சினிமா சினிமா



☸ 3 படத்தில் தனுஷ"டன் நடித்தேன். அவர் ஒரு நல்ல நடிகர். ஒரு படத்தில் இருவரும் சேர்ந்து நடித்தோம் என்பதைத் தவிர எங்களுக்குள் வேறு எந்த உறவும் இல்லை. அதற்கு மேல் எங்களுக்குள் எதுவும் இருக்கவும் முடியாது என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார் ஸ்ருதி ஹாசன்.

அடுத்து, சித்தார்த்துடன் உங்களது நட்பு முறிந்துவிட்டதா என்ற கேள்விக்கு, எங்களுக்குள் எந்த நட்பும் இல்லை. நட்பு இருந்தால்தானே முறிவு இருக்கும். நாங்கள் இருவரும் இணைந்து சில படங்களில் நடிக்கிறோம். அவ்வளவுதான். தொழில் ரீதியாக நாங்கள் பேசிக் கொள்வதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்கிறார் ஸ்ருதி.

☸ தளபதி, ரோஜா, மின்சாரக் கனவு படங்களில் நடித்து தமிழ் ரசிகர்களை குறிப்பாக பெண்களைக் கவர்ந்த நடிகர் அரவிந்த்சாமி, சினிமாவில் இருந்து ஒதுங்கி சொந்த தொழிலில் ஈடுபட்டு வந்தார். வெகு நாட்களுக்குப் பிறகு தற்போது சினிமாவில் முகம் காட்ட உள்ளார் அரவிந்த்சாமி. படம் இயக்குநர் மணிரத்னத்தின் கடல். இப்படத்தில் கார்த்தியின் மகன் கௌதம் ஹீரோவாக அறிமுகமாகிறார். இம்முறை மீனவர்கள் பிரச்சினையை கையில் எடுத்திருக்கிறார் மணிரத்னம்.





☸ நடிகர் ஆர்யா சமீபத்தில் புதிய வீடு ஒன்று வாங்கியிருக்கிறார். அதன் கிரஹப் பிரவேசத்துக்கு அவரின் நெருங்கிய நட்பு வட்டாரத்தை மட்டுமே அழைத்திருந்தார் ஆர்யா. அந்த வட்டாரத்துக்குள் ஒருவராகச் சென்றிருந்த நயன்தாரா, புதுவீட்டில் விளக்கேற்றியதாக கிசு கிசு வெளியாகியுள்ளது. சிம்பு, பிரபுதேவா, இப்போது ஆர்யாவா என்று நயனை பரிதாபத்துடன் பார்க்கிறது கோலிவுட்.



☸ பாலிவுட்டில் முதலாம் இடத்தைப் பிடிப்பதற்கான ரேஸில் ஓடிக் கொண்டிருக்கும் அசின், சுமார் ஒரு மாதமாக மீடியாக்களின் வெளிச்சத்தில் படாமல் இருந்தார். சமீபத்தில் நடந்த ஜெனிலியா திருமணத்திற்கு அசின் சென்றிருந்த போது, யாரும் அவரைக் கண்டு கொள்ளாமல் இருந்தனர். ஆனால் பின்னர் அவர்தான் அசின் என்று கண்டு கொண்ட புகைப்படக் கலைஞர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். அவரை அடையாளம் தெரியாததற்குக் காரணம் ஒல்லிப் பிச்சானாக மாறி இருந்ததுதான். கொழுப்பு நீக்கும் அறுவை சிகிச்சை செய்து கொண்டு ஒல்லியாகி இருக்கிறார் அசின்.

# ஊரைவிட்டு ஓடும் சுயநல சந்தர்ப்பவாதிகளை மக்கள் இனிமேலும் தெரிவு செய்யக் கூடாது

- வெற்றிநிலா இணையக் கட்டுரையிலிருந்து -

"தும்புத்தடி அரசியல்" என்ற சொற்பதம் நீண்ட காலமாக திருகோணமலையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது! இதற்கு இரண்டு தகுதிகள் இருக்கின்றன.

1) சாதியத்தில் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

2) "கறுத்த கோட்" போடும் சட்டத்தரணிகளாக இருக்க வேண்டும்.

இவையிரண்டும் எழுதப்படாத சட்டங்களாக உள்ளன.

இந்த இரண்டு தகுதிகளும் இருந்தால் எந்தத் தும்புத்தடியாவது குறித்த கட்சியின் சார்பில் தேர்தலில் நின்றால் நாடாளுமன்றப் பதவியை அடையலாம். திருமலையில் வட்டாரத்திற்கு வட்டாரம் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகளாக வட்டார உறுப்பினர் தெரிவாக, அதிலிருந்து உயர் அரசியல் குழு ஒன்று இருக்கும். இதில் மறைந்த ஈழத்துநாதன், வீரசுப்பிர மணியம் (தற்போது கனடாவில் வசிப்பவர்), திருமதி. பிலோமினா லோறன்ஸ், குலசிங்கம் (உவர்மலை) தணிகாசலம் (உப்புவெளி) போன்ற இன்னும் ஒரு சிலர் அங்கம் வகிப்பார்கள். அநேகமாக இவர்கள் கூடிஎடுக்கும் முடிவும் ஜனநாயக ரீதியில் தந்தை செல்வா, அமிர் அவர்கள் மூலம் அங்கீகரிக்கப்படும்.

1977ஆம் ஆண்டோ அல்லது அதற்கு முதலோ (சரியாக ஞாபகம் இல்லை) இந்த திருமலை நிர்வாகக்குழு மக்கள் மத்தியில் அப்போது நிறைந்த செல்வாக்கிலிருந்த திரு. அ.தங்கத்துரை அவர்களை நியமிக்கச்சொல்லி தமிழ்த் தலைமையை வலியுறுத்தி இருந்தது. அதே நேரம் இரா.சம்பந்தர் அவர்களும் தனக்கு கூட்டணி சீட் தரவேண்டுமென ஒரு சில பக்கவாத்தியங்களுடன் அமிர்தலிங்கம் அவர்கட்கு அழுத்தம் கொடுத்திருந்தார்.

இந்நிலையில் திருமலையில் பெரும்பான்மை ஆதரவு தங்கத்துரை அவர்கட்கும், சம்பந்தருக்கு உறவுக்காரர்களும், வழக்குக்கு வரும் கட்சிக்காரர் களும், மேலும் சில ஆலவட்ட ஆதரவாளர்களுமாக ஏதோ சிறியளவில் ஆதரவு இருந்தது. இது நொமினேசனான கடைசி நேரத்தில் போட்டியாக வலுத்திருந்தது. எனவே இறுதிக்கட்டத்தில் யாழ்ப் பாணத்திலிருந்து வந்த அமிர்தலிங்கம் அவர்கள் திருமலை நிர்வாகக் குழுவையோ, மக்களையோ கலந்தாலோசிக்காது, அவர்களின் தெரிவை செவிமடுக்காது சம்பந்தன் அவர்களைத் தெரிவு செய்துவிட்டு சென்றார்.

இதனால் இந்த நிர்வாகக் குழுவும், மக்களும் கொதிப்படைந்து அமிர்தலிங்கத்தையும், சம்பந்த னையும் வெறுத்திருந்தனர். ஆனால் தேர்தல் நாள் நெருங்க நெருங்க வெறுப்பிலிருந்த இவர்களே மீண்டும் ஒன்று சேர்ந்து வீதிவீதியாக பலவித பிரசாரங்கள் மூலம் சம்பந்தனை அமோக வெற்றி பெறச்செய்தனர். இது தான் "தும்புத்தடி அரசியல்" என்பதற்கான உதாரணம்.





சம்பந்தன் சட்டத்தரணியாக இருந்ததுதான் அவர் தெரிவாவதற்கு மூலகாரணமாக இருந்தது என்பதனை அன்று அனைவரும் அறிந்தனர்.

தங்கத்துரை அவர்களுக்கும் இதே நெருக்கடி நிலை ஏற்பட்டது. அவர் அரசியலில் நுழைந்த பின்னாளில் வெளிவாரி படிப்பாக சட்டத்துறையை படித்து வக்கீலாகினார். ஈழத் தமிழர்களின் தலைவர்கள் சட்டத்தரணிகளாக இருக்க வேண்டும் என்பது அன்றைய தலைமையின் கட்டாயமாகும்.

தற்போதைய த.வி.கூட்டணி தலைவர் திரு. ஆனந்தசங்கரி அவர்களும் அரசியலுக்கு வரும்போது ஆசிரியராகத்தான் இருந்தார். அவரும் தமிழ் தலைமைகளின் தகைமைகளை உணர்ந்தோ என்னவோ வெளிவாரிப் படிப்பின் மூலம்தான் வக்கீல் ஆகினார்.

இதேபோல் இன்று தொடரும் நிலையோ மிகவும் கேவலமானது. தமிழ் இனத்தின் தலைமை விதியின் வசம் சம்பந்தரின் கைக்குள் சிக்கிக்கொண் டது. சம்பந்தருக்கு அடுத்தபடியாக தற்போது இருக் கும் வரிசைக் கிரமப்படி சேனாதிராசாவுக்கு அன்றி சுரேஸ் பிரேமச் சந்திரனுக்கு என்ற தலை மப் போட்டி உள்ளூரநிலவுகின்றது. இந்தப் போட்டி யில் தற்போது எம்.ஏ.சுமந்திரன் முன்நிற்கிறார்.

நியமன எம்.பியாக தற்போது த.தே.கூட்டமைப் பில் அங்கம் வகிப்பவர் சுமந்திரன் என்பது எல்லோருக்கும் தெரியும். இவர் ஒரு சட்டத்தரணி என்பது பலரும் அறிந்த உண்மை ஆனால் இவர் தலைவர் சம்பந்தனின் மகனின் நண்பராக இருந்து ஒன்றாக படித்தவர் என்பது பலருக்குத் தெரியாத உண்மை.

எம்.ஏ.சுமந்திரன் சட்டத்தரணியாக இருக்கலாம் இன்று நாடாளுமன்ற ஆசனங்களை அலங்கரிக் கின்ற பல தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்க ளிலும் பார்க்க அப்பதவிக்கு தகுதியுடையவராக இருக்கலாம். ஆனாலும் இரா. சம்பந்தனின் தனிப் பட்ட விருப்பு வெறுப்புக்கு அமைய நியமனங் களை மேற்கொள்வது மிகவும் ஆபத்தானது.

எந்தப் பிரச்சினைகளையும் குற்றச்சாட்டுகளை யும் வழக்கம்போல் சம்பந்தன் கணக்கில் எடுப்ப தில்லை. அவரின் தன்னிச்சையான முடிவுதான் கட்சியின் முடி வாகின்றது.

இந்தியாவில் தனது குடும்ப இருப்பையும், ங்கையில் இடையிடையே வந்துபோய் ாளுமன்ற பிரசன்னங்கள், பேச்சுவார்த்தைகள், திப்புக்கள் என மேற்கொள்ளும் அரசியலை ப்யும் சம்பந்தன் தேர்தல் காலத்தில் மட்டுமே து தொகுதியான திருமலையை எட்டிப் ப்பார்.

ஆனால் இன்றும் இந்த முடியாத வயதான த் திலும் திருமலை பிரதிநிதித்துவத்திற்கு ரையும் முன்னிறுத்தவோ, விட்டுக்கொடுத்து ங்கி நல்ல தலைமைகளை அடையாளப் படுத்தவோ மறுக்கிறார் சம்பந்தன்.

கடந்து போன யுத்த காலங்களிலும் ஊரைவிட் டுக்கூட ஓடாமல் மண்ணுக்காக மக்களுக்காக அவர்களுடன் வாழ்ந்தவர்கள்தான் எம்மக்களை இனியும் வழிநடத்த தகுதியுள்ளவர்கள்.

நாடாளுமன்றக் கதிரைக்காக அரசியல் செய்த இந்த ஆறு தசாப்தத்தினை படிப்பினையாகக் கொண்டு, யாரால இந்த நாடாளுமன்ற ஆசனங்கள் பெருமைப்படும் என மக்களுக்குள் வாழும் மனிதம் நிறைந்தவர்களை இனிமேலாவது நாம் தேட வேண்டும்.

நாடாளுமன்றப் பிரதிநிதிகள் என்று சொல்பவர்கள் தியாகம் செய்தவர்களாகவும், உண்மையான விடுதலை யை நேசிக்கக் கூடியவர்களாகவும், பொது வாழ்க்கையில் நேர்மையானவர்களாகவும் இருக்க வேண்டும். அப்படியானவர்களால் மட்டுமே நாடாளுமன்ற ஆசனங் களால் மக்களுக்கு குறைந்தபட்ச நன்மைகளையாவது செய்ய முடியும். அதனால் மறைவிடத்தில் ஒன்றும் பொதுவில் வேறொன்றும் பேசும் சுயநல சந்தர்ப் பவாதிகளை மக்கள் இனிமேலும் தெரிவு செய்யக் கூடாது. பழைய தலைமைகள் தங்கள் தகுதி அறிவுக்கு ஏற்பச் செயற்பட்டு தவறானவர்களைத் தலைமைக்கு இழுத்து வந்துவிட்டனர். நாம் திரும்பிப் பார்ப்போம், திருத்திக் கொள்வோம்.

---

# பனிமனிதனின் மர்மம்!

**1991** ஆம் வருடம் இத்தாலியின் அல்ப்ஸ் மலைப் பிரதேசத்தின் எல்லை யில் பலவருடங்களாக பனியில் உறைந்து கிடந்த ஒரு மனித உடலை மலை ஏறிகள் கண்டுபிடித்தார்கள். ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஆகப் பழமையான சடலம் இதுதான். இந்த பனிமனிதனுக்கு விஞ்ஞானிகள் ஒட்ஸி என்று பெயர் சூட்டினார்கள். இவன் 5300 வருடங் களுக்கு முன்னர் வாழ்ந்து அவனுடைய 40 வயதளவில் இறந்துபோயிருக்கலாம் என விஞ்ஞானிகள் கணித்தனர். கடந்த 20 வருடங்களாக பல ஆய்வாளர்கள் இந்த பனிமனிதன் பற்றிய மர்மத்தை விடுவிக்க பாடுபடுகின்றனர்.

அவன் குளிரைத் தாங்குவதற்கு மூன்று அடுக்கு உடை அணிந்திருந்தான். கரடித் தோல் காலணியைப் புற்கள் நிரப்பி காலில் தரித்திருந்தான். மான்தோலில் செய்த அம்பறாத்தூணி, நாண் பூட்டாத வில், நெருப்பு உண்டாக்கும் குச்சிகள், கல்நுனி பதித்த ஈட்டி மற்றும் செம்பு முனைக் கோடரி ஆகியவை அவனிடம் காணப்பட்ட பொருட்கள். அவன் கடை சியாகச் சாப்பிட்ட உணவு மான் இறைச்சியும், கோது மையும். 6500 அடி உயரத்தில் பாறையின் மறைவு ஒன்றில் வசந்த காலத் தொடக்கத்தில் அவன் இறந்திருக்கிறான். இருபது வருடங்களாக பல விஞ்ஞானிகள் ஏன், எதற்காக, எப்படி இறந்தான் என்பதை துலக்குவதற்கு ஆராய்ச்சிகள் செய்தார்கள். ஆனால் தீர்மானமாக ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

சிலர் அவன் ஆடு மேய்ப்பவன் வழி தவறிப்போய் குளிரில் மாட்டி இறந்து போனான் என்றார்கள். இன்னும் சிலர் வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் அவனை கொன்றிருக்கலாம் என ஊகித்தனர். அப்படியிருக்க வாய்ப்பில்லை. அந்தக் காலத்தில் மிகவும் பெறுமதி வாய்ந்த செம்புக் கோடரியை அவர்கள் எடுத்துப் போகவில்லை. வேறு சிலர் போரில் எதிரிக்குழுவினரிடம் மாட்டியிருக்கலாம் என்றனர். நரபலி என்ற கருத்துக்கூட இருந் தது. ஆனால் அதற்கான சாத்தியக்கூறு கள் இல்லை.

சமீபத்தில் National Geographic இதழ் இந்த மர்மத்தை விடுவித்திருக்கிறது. ஒட்ஸியின் உடலை எடுத்துப் போய் ஆராய்ச்சியாளர்கள் ஸ்கேன் செய்து பார்த்தார்கள். அவனுடைய இடது தோளில் முக்கியமான ரத்த நாளம் ஒன்று கல் முனை அம்பினால் துண்டாக்கப்பட்டி ருப்பது தெரிந்தது. அவனை யாரோ




அம்பு எய்து தாக்கியதால் ரத்தம் இழந்து இறந்துபோயிருக்கிறான். நரபலியும் இல்லை, பட்டினிச் சாவும் இல்லை, கொள்ளையும் இல்லை. கொலை என்பது நிச்சயமாகியிருக்கிறது. இப்படித்தான் விஞ்ஞானம் முன்னால் முன்னால் வளர அந்த அறிவை பின்னால் பின்னால் தள்ளிச் சென்று ஆராய முடிகிறது. ஆராய்ச்சி இத்துடன் முடியப் போவதில் லை. ஒட்ஸி மனிதனைப்பற்றி தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடந்துகொண் டேயிருக் கும். இன்னும் 100 வருடங்கள் கழித்து அவர்கள் மேலும் சில புது விசயங்க ளைக் கண்டுபிடிக்கலாம்.

ஒட்ஸி மனிதன் ஒரு பெண்ணை நேசித்தான். சில நாட்களில் தனக்கு சொந்தமாக்கி விட்டான். அது இன்னொ ருவனுக்கு பொறாமையை கிளப்ப அவன் ஒட்ஸியை கொல்ல திட்டமிட்டு, அம்பெய்து கொன்றான். இந்த ஒட்ஸிக்கு அந்தப் பெண்ணிடம் இரண்டு பிள்ளை கள் பிறந்தார்கள். அவர்களின் சந்ததி 140 தலைமுறையாக பல்கிப் பெருகி பரவி இன்றைக்கும் வாழ்கிறது. இந்தச் சந்ததியில் வந்த ஒருத்தன் இன்று நியூ ஸிலாந்திலும், பெண் ஒருத்தி ஆந்திரா விலும் வாழ்கிறார்கள். இப்படியெல்லாம் வருங்கால விஞ்ஞானிகள் கண்டுபிடிக் கக்கூடும்.

விஞ்ஞானம் ஒருவருக்காகவும் நிற்ப தில்லை. அது தன் பாட்டுக்கு வளர்ந்து கொண்டே போகிறது. புதுப்புது கண்டு பிடிப்புகளும் புது விளக்கங்களும் வருவது இயற்கை.

- அ.முத்துலிங்கம்.

---

## ஐந்து சமுத்திரங்கள்

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் ஐந்து சமுத்திரங்கள் உள்ளன. ஆனால், அவற்றில் ஒன்றில் கூட அலைகளைக் காண முடியாது. காரணம் அனைத்துமே ஊரின் பெயர்கள்... அவை: அம்பா சமுத்திரம், கோபால சமுத்திரம், வடமலை சமுத்திரம், ரவண சமுத்திரம், ரங்க சமுத்திரம் என்னும் ஊர்களாகும்.

## முதல் தபால்

இங்கிலாந்தில் 1712 ஆம் ஆண்டு சான்குவார் என்ற இடத்தில் உலகின் முதல் தபால்நிலையம் தொடங்கப்பட்டது. அது இப்போது தனது 300 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடத் தயாராகிவருகிறது.

## இடதுபக்க ஓட்டம்

உலகத்தில் 66 வீதம் மக்கள் வாகனங்களை வலது பக்கத்தில் ஓட்டுகிறார்கள். மீதி 34 வீதம் மக்கள், இந்தியா, இங்கிலாந்து, இலங்கை, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் இடது பக்கத்தில் ஓட்டுகிறார்கள். இது எப்படி நிகழ்ந்தது? முந்திய காலத்தில் குதிரைகளில் செல்லுபோது போர் வீரர்கள் இடதுபக்கமாகவே பயணிப்பார்கள். அப்பொழுதுதான் எதிரிலே வரும் பகை நாட்டு குதிரை வீரனுடன் வலது கையால் வாளை உருவி போர் செய்யமுடியும். அந்தப் பழக்கத்தில்தான் இந்த நாட்டு மக்கள் இன்றும் இடது பக்கத்தில் வாகனத்தை ஓட்டுகிறார்கள்.



# பிரேரணையில் மூழ்கியிருக்காது நாட்டிற்காக செயற்படவேண்டும்

## ஐக்கிய தேசியக்கட்சி

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக கப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டதில் மாத்திரம் தங்கியிருக்காது நாட்டின் எதிர்கால பயணத்தைக் கருத்திற்கொண்டு இலங்கை செயற்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அக்கட்சி விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரசியல் கட்சிகளும் இணங்கியுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக குழுவின் பரிந்துரைகளை செயற் படுத்துவதே தற்போதைய தேவையாகும்.

ஆணைக்குழுவின் அறிக்கையில் ஏற்றுக் கொள்ள முடியாத சில விடயங்கள் இருந்தால் அனைத்து தரப்பினரும் இணக்கம் கண்டுள்ள பரிந்துரைகளை முதற்கட்டமாக செயற்படுத்த முடியும்.

ஜெனிவா பிரேரணை தொடர்பாக கோபம் கொள்வதற்கோ சர்வதேச சமூகத்திற்கு எதிராக குரல் எழுப்புவதற்கோ காரணம் கிடையாது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை களை காலம் கடத்தாமல் செயற்படுத்தியிருந்தால் சர்வதேச சமூகம் இத்தகைய பிரேரணையொன்றை கொண்டு வருவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேணைக்கு எதிராக அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற கட்டட தொகுதிக்கு முன்னால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# இரத்தினக்கல் வீதி ஏலம்

(கொழும்பு)

இரத்தினக்கல் படிமம் கண்டுபிடிக்கப்பட்ட இரத்தினபுரி வெரலுபே வீதி ஏலத்தில் விற்கப்படவுள்ளது.

குறித்த வீதியில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதே இரத்தினக்கல் படிமம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இந்தப் படிமத்தில் இருந்து புஷ்பராகம், நீல மாணிக்கம் உள்ளிட்ட இரத்தினக்கற்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபை அறிவித்துள்ளது.

இதற்கமைய குறித்த வீதி 10 தொடக்கம் 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஏலத்தில் விடப்படுகின்றதென அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கதிர்காமம் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரத்தினக்கல் படிமத்துடன் கூடிய காணி, ஏலத்தில் விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# நாணயத் தாள்கள் இறக்குமதி ; நாடாளுமன்றத்தில் கேள்வி

(கொழும்பு)

நாணயத்தாள்களை அச்சடிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட தோமஸ் டி லா றூ லங்கா லிமிடெட் நிறுவனத்திற்கு நாணயங்களை அச்சடிப்பதற்கான ஒப்பந்தங்களை வழங்காமல் வெளிநாட்டில் அச்சடிக்கப்பட்ட நாணயங்களை மத்திய வங்கி இறக்குமதி செய்ததாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை விசாரிப்பதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இது தொடர்பாக கேள்வி எழுப்பிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயகக, வெளியிடங்களில் அச்சடிக்கப்பட்ட நாணயத தாள்கள் இறக்குமதி செய்ததன் மூலம அமைச்சரவையின் நடைமுறையை மத்திய வங்கி மீறியுள்ளதாகக் கூறினார். இக் குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு போதிய ஆதாரம் இருப்பதாக கூறினார்.

சிரேஷ்ட நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம உரையாற்றுகையில், 2006 ஆம் ஆண்டு அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தின்படி, நாணயத்தாள்களை அச்சடிப்பது முற்றிலும் தோமஸ் டி லா றூ லங்கா லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்றார்.



இந்நிறுவனத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு 40 சதவீதம் பங்கு உள்ளதாகவும் இந்நிறுவனத்திற்கு சிங்கப்பூரில் கிளையொன்று இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ரவி கருணாநாயக்கவின் குற்றச்சாட்டு தொடர்பாக உடனடியாக விசாரிக்கப்பட்டு, விசாரணை முடிவு நாடாளுமன்றத்திற்கு அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

# பூச்சிநாசினி பதிவாளர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல்?

(கொழும்பு)

ஆர்சனிக், மேக்கூரி எனும் நச்சுப்பொருட்களைக் கொண்டிருந்த பூச்சிநாசினிகள்ள நீதிமன்றத்தின் உத்தரவை மீறி பாவனைக்குவிட்ட பூச்சிநாசினி பதிவாளர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு சுற்றுச் சூழல் நீதிக்கான நிலையத்தின் வழக்குரைஞர் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் கோரினார்.

மனிதருக்கு தீங்கு விளைவிக்கும் அளவுக்கு இந்தப் பூச்சிநாசினிகளில் ஆர்சனிக் மற்றும் மேக்கூரி என்பன காணப்படாததால் மேற்படி கொள்கலன்களை இறக்குமதியாளர்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டதாக அரச தரப்பு வழக்குரைஞர் கூறினார்.

நீதிமன்றத்தின் கட்டளையை புறக்கணித்து, இந்தக் கொள்கலன்களை இறக்குமதியாளர்கள் எடுத்துச்செல்ல சுங்க அதிகாரிகள் அனுமதித்தமை நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் எனவும் இவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு சுமத்தப்பட வேண்டுமெனவும் மனுதாரர் சார்பில் தோன்றிய ரவீந்தரநாத் தாபரே வாதாடினார்.

அடுத்த விசாரணை தினத்தில் இவ்வேண்டுகோளை முன்வைக்குமாறு நீதிபதி தேவிகா தென்னக்கோன் கூறியதுடன் மே 7 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

# மேயர் வீட்டின்மீது கல்வீச்சு

(கொழும்பு)

காலி மாநகரசபை மேயர் மெத்சிறி த சில்வாவின் வீட்டின் மீது கல்வீச்சுப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 12.51 மணியளவில் இந்த கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இதன் போது வீட்டில் இருந்த எவருக்கும் எந்த வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

காலி நகரத்தில் இருக்கும் நடைபாதைக் கடைகளை அகற்றியமை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களே இந்தத் தாக்குதலை நடாத்தியுள்ளதாக தாம் சந்தேகிப்பதாக மாநகரசபை மேயர் மெத்சிறி த சில்வா தெரிவித்துள்ளார்.

இக் கல்வீச்சு சம்பவம் தொடர்பான விசாரணைகளை காலி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.


# குடும்பத்திற்காக குவைத் சென்றவர் கால்தவறி விழுந்து மரணம்

வேலைவாய்ப்பிற்காக குவைத் சென்று நகர கட்டடப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இலங்கையர் ஒருவர் கால் தவறி கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

குவைத் - அஹமதி நகரில் பல்கூட்டு மாடிக் கட்டடப்பணியில் நேற்று முன்தினம் காலை ஈடுபட்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கீழே விழுந்த இவர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளார். கிண்ணியா- குட்டிகக்கராசசி 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மூனறு பிள்ளைகளின் தந்தையா்ன 35 வயதுடைய அலிபுகான் பஸீர் என்பவரே உயிரிழந்தவராவர்.

இவரது இறுதிக்கிரியைகளை குவைத்தில் மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குவைத்தில் இருக்கும் இவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

# முதல் பிரதமரின் நினைவு தினம்



இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவின் 60 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு சுதந்திர சதுக்கத்திலுள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு நேற்று முன்தினம் மாலை மலர் அணிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதமர் டி.எம்.ஜயரட்ன, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் ருவன் விஜேவர்தன மற்றும் கொழும்பு மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# நாட்டைக் காப்பாற்றுவேன்



(கொழும்பு)

என்றாவது ஒருநாள் நாட்டைக் காப்பாற்றுவேன். குண்டர்களாலும், செயற்திறனற்ற நபர்களாலும் நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மருத்துவ சிகிச்சைகளுக்காக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றுக்கு நேற்று முன்தினம் அழைத்துச் செல்லப்பட்டிருந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஏழாயிரத்து 500 ரூபா பணத்தைக் கொண்டு மூன்று பேர் கொண்ட குடும்பம், ஒரு மாதம் வாழ்க்கை நடத்த முடியும் என அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். பஸ் கட்டண அதிகரிப்பினால் பிரச்சினை இல்லை என மற்றுமொரு அமைச்சர் கூறியுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பெண்ணொருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

இவ்வாறு பொறுப்பற்ற கருத்துக்களை வெளியிடும் நபர்களாலும் குண்டர்களாலும் நாட்டை முன்னேற்ற முடியுமா? என்றாவது ஒருநாள் நான் நாட்டை காப்பாற்றுவேன் என்றார்.

# யாழ்ப்பாணம், கிளிநொச்சி அதிநவீன நகரங்களாக மாறும்

(கொழும்பு)

யாழ்.நகரமும், கிளிநொச்சி நகரமும் அதிநவீன வசதிகள் கொண்ட முன்மாதிரி நகரங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமையவே இந்த நவீன நகர அபிவிருத்திச் செயற்றிட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. கொழும்பு மற்றும் அதை அண்டிய பிரதேசங்களிலுள்ள சிறு நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது பெறப்பட்ட அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டே இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நகரங்களுடன் அக்கரைப்பற்று, இமதுவ, அப்புத்தளை, தியத்தலாவ, கண்டி, நுவரெலியா, நாரம்மலை, பண்டு வஸ்நுவர, மாத்தறை, எஹலியகொட, ஊருபொக்க, தங்கொட்டுவ, கருவலகஸ்வெல ஆகிய நகரங்களும் இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு நவீனப்படுத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தனியார் வைத்தியக் கல்லூரி; அறிக்கை கையளிப்பு



(கொழும்பு)

மாலபே தனியார் வைத்தியக் கல்லூரி அமைப்பது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

அலரி மாளிகையில் வைத்து சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்த அறிக்கையைக் கையளித்தார். இது தொடர்பான நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க- நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர- சுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திர ருபேரு ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

# கொழுந்து பறிக்கும் பயிற்சி



2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்திபெற்று இலங்கை நிர்வாக சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான களப்பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கை நாவலப்பிட்டி - கிறீன்வூட் தோட்டத்தில் இடம்பெற்றது.

கண்டி மாவட்டச் செயலாளரின் தலைமையின் கீழ் மேற்படி நியமனத்தினைப் பெற்ற 36 உத்தியோகத்தர்களுக்கு கடந்த இரண்டு நாட்களாக இப்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதன்போது, எவ்வாறு கொழுந்து பறித்தல் நடவடிக்கைளில் ஈடுப்பட வேண்டும் என்பது பற்றிய அறுவுறுத்தல்கள் மேற்படி பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன. இதேவேளை, தேயிலைத் தொழிற்துறைப்பற்றிய பல்வேறு தகவல்களையும் களப் பயிற்சியாளர்கள் திரட்டிக்கொண்டனர்.

இப்பயிற்சியில் வடக்கு, கிழக்கு, தென் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் பங்குபற்றினர்.

# வடக்கில் சத்துணவுத் திட்டம்; ஜப்பானிய அரசு உதவி

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் சத்துணவுத் திட்டத்துக்கு ஜப்பான் அரசாங்கம் 180 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. ஜப்பானின் நிதியுதவியுடன் வட பகுதி பாடசாலை மாணவர்களிடையே முன்னெடுக்கப்படவிருக்கும் இந்த சத்துணவுத்திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாகக் கண்காணிக்கப்படும் என்றும் கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் ஒரு அங்கமாக ஜப்பானின் பூமிய திர்ச்சி ஏற்படும் பகுதிகளில் வழங்கப்படுவது போன்று தகரங்களில் அடைக்கப்பட்ட மீன்கள் வழங்கப்படவிருப்பதாகவும் ஜப்பான் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் சில பொருட்கள் இத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படவிருப்பதாகவும் ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நாளை காலை 9 மணிமுதல் 10.15 மணி வரை இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9 மணியில் இருந்து 5 மணிவரை எண்ணெய்க் காப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# மனைப்பொருளியல்; ஏப்ரல் - 05இல் ஆரம்பம்


(கொழும்பு)

மனைப் பொருளியல் திட்டமான "திவிநெகும" திட்டத்தின் மூன்றாம் கட்டத்துக்கு 25 இலட்சம் பக்கெட் விதைகளை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 05ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்படும் மூன்றாம் கட்டத்தில் 25 இலட்சம் குடும்பங்களுக்கு விதைப் பக்கெட்டுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதற்கு 178 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு. 10 வகையான விதைகளும் வழங்கப்படவுள்ளன.

# காசநோயைக் கட்டுப்படுத்தல் காலத்தின் தேவையாகும்




காசநோய்க்குரிய நோய்க்காரணியாக மைக்கோபக்ரீரியம் ரியூபோகுளோசிஸ் பக்ரீரியாவை (Micobacterium Tuberculosis) 1882 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 24ஆம் திகதி ஜேர்மனிய நாட்டு விஞ்ஞானியான றொபேட் கொக் (Robert Koch) கண்டு பிடித்தார். இதனை நினைவு கூரும் முகமாகவும், உலகில் காசநோயைக் கட்டுப்படுத்துவதையும் நோக்காகக்கொண்டு உலகம முழுவதும் இன்று "உலகக் காசநோய் தினம்" கொண்டாடப்படுகின்றது. இவ்வாண்டு 'காசநோயை என்வாழ்வில் இல்லா தொழிப்பேன்' என்ற தொனிப்பொருளில் அனுஷ்டிக்கப்படுகிறது.

காசநோயாளிகளில் பெரும்பாலும் 80 வீதமானவர்கள் நுரையீரல் சம்பந்தமான காசநோயாளிகளாகவும் 20 வீதமானவர்கள் நுரையீரல் தவிர்ந்த காசநோயாளர்களாகவும் காணப்படுகின்றனர். அதாவது இதயம், முள்ளந்தண்டு, மூளை, கண், என்பு, நிணநீர்க்கணு போன்ற அங்கங்களையும் காசநோய் பக்ரீரியா தாக்கி நோயை ஏற்படுத்துகிறது.

### காசநோயின் அறிகுறிகள்

இரண்டு கிழமைகளுக்கு மேலாக இடைவிடாது தொடரும் இருமல் பிரதான நோயின் அறிகுறியாகும். மேலதிக நோய் அறிகுறிகளாக நிறைகுறைவடைதல், உடல் மெலிதல், பசியின்மை, இரவில் இலேசான காய்ச்சலும் வியர்த்தலும், இளைப்பு, நெஞ்சு நோ, சளியுடன் இரத்தம் வெளியேறுதல் போன்றனவாகும். நுரையீரல் தவிர்ந்த காசநோயின் அறிகுறிகளாக நிணநீர்க்கணு வீங்குதல், இடுப்புவலி, தோல்நோய்கள் போன்றவற்றைக் கருதலாம்.

### காசநோய் பரவும் பொதுவான முறைகள்

காசநோயாளியின் சுவாசப்பை உட்பட சுவாசப் பாதையில் பெருமளவு காசநோய்ப் பக்ரீரியாக்கள் காணப்படும். இந்நோயாளி இருமும்போது அல்லது பலமாகச் சிரிக்கும்போது வாய் அல்லது மூக்கினூடாக வெளியேறும். வளியில் மிதக்கக்கூடிய மிகவும் சிறிய

**இன்று உலக காசநோய் தினம்**

திரவத்துளிகள் வளிமண்டலத்தில் விடுவிக்கப்படும். இவை காற்றில் மிதந்தபடி காணப்படும். சுகதேசியான ஒருவர் இக் கிருமிகள் அடங்கிய திரவத்துளிகளுள்ள காற்றை உட்சுவாசிக்கும் போது இலகுவாக அச்சுகதேகியின் சுவாசப்பாதையில் இக்கிருமிகள் தொற்றிவிடுகின்றன.

### காசநோய் தொற்றுவதைத் தடுத்தல்

நோயறிகுறிகள் காணப்படுமிடத்து குறித்தநபர் தாமதமின்றி மார்புச்சிகிச்சை நிலையத்திலோ அரசவைத்தியசாலைகளிலோ பரிசோதித்துக்கொள்ள வேண்டும். மேலும் நோயாளியெனக் கருதப்படுபவர் தனக்கு நியமிக்கப்பட்ட மாத்திரைகளை தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்புவாய்ந்த ஒருவரின் முன்னிலையில் தானாக விரும்பி தினமும் உட்கொள்ள வேண்டும். (நேரடிக்கண்காணிப்புச்சிகிச்சை - Dot) மேலும் நோயாளி கண்ட இடங்களில் சளிதுப்புவதை தவிர்த்து சளியை பாத்திரத்தில் சேகரித்து பாதுகாப்பாக புதைத்துவிடுதல் அல்லது எரித்துவிடுதல், இருமும் போது, தும்மும் போது மூக்கு வாய்ப்பகுதிகளை மென்மையான கைக்குட்டையால் மூடுவதன் மூலம் வளியில் கிருமி பரவுதலைக் குறைக்கலாம்.

### காசநோயைக் குணப்படுத்தல்

ஒழுங்காக சிகிச்சை நிலையத்தில் வழங்கப்படும் மாத்திரைகளை இடைவிடாது 6 மாதங்களுக்கு எடுப்பதன் மூலம் இந்நோயைப் பூரணமாக குணப்படுத்தலாம். சிலசமயங்களில் மீண்டும் இந்நோய் ஏற்பட்டால் சிகிச்சைக்காலம் 08 மாதமாக அதிகரிக்கப்படலாம்.

### காசநோய்க்கான பரிசோதனை

நோயாளியில் இருந்து வெளியேற்றப்படும் சளியை, சளிப்படலமாதிரியாக தயார் செய்து சாயம் ஊட்டி நுணுக்குக்காட்டியில் அவதானித்தல், Xray (எக்ஸ்றே) மன்றோ (Mantoux) பரிசோதனை, மரபு உயிரணுப்பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு இனங்காணப்படலாம். நோயெதிர்ப்புத்தன்மை குறைவானவர்களுக்கு காசநோய் தொற்றும் வாய்ப்பு உள்ளது. உதாரணமாக நீரிழிவு நோயுள்ளோர், போசாக்குக் குறைபாடுடையோர், புகை பிடித்தல், போதைவஸ்து, மதுபானம் அருந்துவோர், எச்.ஐ.வி.(H.I.V) தொற்றுடையவர்கள் போன்றோரில் காசநோய் இலகுவாகத் தொற்றிக் கொள்கிறது.

### காசமும் HIV தொற்றும்

HIV இன வைரசுக்கள் தொற்றுடையவர்களில் படிப்படியாக நோய் எதிர்ப்புச சக்தி குறைவடைந்து கொண்டு செல்வதால் அவர்களுக்கு 21வீதம் தொடக்கம் 34 வீதம் வரை காசநோய் உண்டாக்கக்கூடிய சாத்தியக்கூறு உண்டு.

HIV தொற்று ஏற்பட்டு இறப்பைத் தழுவும் ஒருவரில் பிரதான காரணமாக காசநோயும் காணப்படுகின்றது. காசநோயினால் ஏற்படும் மரணங்களில் நான்கினைக்கருதினால் அவ் இறப்பில் ஒரு HIV தொற்று ஏற்பட்டு நோய்வாய்ப்பட்டவரும் உள்ளடக்கப்பட்டிருப்பர். 2010 ஆம் ஆண்டளவில் உலகளாவிய ரீதியில் மூன்று இலட்சத்து 50 ஆயிரம் பேர் காசநோயும், HIV தொற்று ஏற்பட்ட நோயுடையவர்களாகக் காணப்பட்டு இறந்தார்கள். எனவே HIV தொற்றுடைய ஒருவரில் காசநோய் பரிசோதனை செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**வை.பிறேமகுமார்**
**முன்னாள் கொழும்பு தேசியவைத்தியசாலைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்**



யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டியில் நாவாந்துறை றோ.க.வித்தியாலய அணி முதலிடத்தைப் பெற்றது. இப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி இரண்டாமிடத்தையும், யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி மூன்றாமிடத்தையும், சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்டன. முதலிடத்தைப் பிடித்துக்கொண்ட யாழ். நாவாந்துறை றோ.க. வித்தியாலய அணி வீரர்கள் நிற்பதைக் காணலாம்.

# வவுனியாவில் முக்கோணத் தொடர் விபுலானந்தா கல்லூரி சம்பியன்

(வவுனியா)

வவுனியாவில் முதன் முறையாக நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மும்முனை கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

நான்கு நாட்களாக நடைபெற்ற இப்போட்டித் தொடர் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.

50 ஓவர்கள் கொண்ட இப் போட்டித் தொடரில் வவுனியா இந்துக் கல்லூரி, விபுலாந்தாக் கல்லூரி மற்றும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணிகள் மோதின.

இதன் இறுதிப் போட்டியில் வவுனியா இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து விபுலானந்தாக் கல்லூரி அணி மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற விபுலானந்தாக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய வவுனியா இந்துக் கல்லூரி அணி 41 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிறிதரன் 47 பந்துகளில் 37 ஓட்டங்களையும், திருப்பிரியன் 44 பந்துகளில் 52 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கஜன், தடுசூடன் தலா மூன்று விக்கெடடுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய விபுலானந்தாக் கல்லூரி அணி 40.1 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் 73 பந்துகளை எதிர்கொண்ட தினேஸ் 11 பவுண்டரிகள் அடங்கலாக 77 ஓட்டங்களையும், பானுஜன் 34 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றியை இலகுபடுத்தினர். பந்து வீச்சில் புனிதவதனன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

விபுலானந்தாக் கல்லூரிக்கு சொந்தமாக மைதான வசதிகள் அற்ற நிலையில் அவ்வணி போதிய பயிற்சிகள் இன்றியும் இப் போட்டித் தொடரில் பங்குகொண்டு சம்பியன் பட்டத்தை வென்றமை வவுனியாவில் அனைத்துத் தரப்பினரையும் மகிழ்ச்சி அடைய வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சிங்கர் வெற்றிக் கிண்ணம் ஆவரங்கால் மத்தி வசம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்ட ரீதியில் நடைபெற்ற சிங்கர் வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் மத்திய அணி சம்பியனானது.

இப்போட்டி கடந்த 18ஆம் திகதி ஆவரங்கால் மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரில் பல அணிகள் பங்குபற்றிருந்தன.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டி ஆவரங்கால் மத்திய அணிக்கும் கோப்பாய் ஐக்கிய அணிக்கும் இடையில் இடம் பெறவிருந்தது. இதில் கோப்பாய் ஐக்கிய அணி சமுகம் அளிக்காதமையால் ஆவரங்கால் மத்திய அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் புத்தூர் வளர்மதி அணியும் மோதின.

இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25-18, 25-15, 25-20 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், ஆவரங்கால் மத்தி அணியும் மோதின.

இப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றபோதிலும் ஆவரங்கால் மத்திய அணியே ஆதிக்கம் செலுத்தியது. இப்போட்டி நிறைவில் ஆவரங்கால் மத்தி அணி 25-22, 25-23, 25-23 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சிங்கர் கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, அடுத்த மாதம் நடைபெறவுள்ள மாகாண மட்ட சிங்கர் வெற்றிக் கிண்ணப் போடடிக்கு மேற்படி இறுதிப் போட்டியில் விளையாடி இரு அணிகளும் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# காங்கேசன்துறை ஐக்கியம் கூடைப்பந்தில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்ட கூடைப்பந்தாடடப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரியில் கடந்த 2000ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை உயர் கல்வி பயின்ற பழைய மாணவர்களின் ஆதரவுடன் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஆதரவுடன் மின்னொளியில் நடைபெற்ற இப் போட்டித் தொடரில் பல அணிகள் பங்குபற்றின.

இதன் இறுதிப் போட்டி கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது. இதில் காங்கேசன்துறை ஐக்கிய அணியும், ஜொலிஸ்ரார் அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் காங்கேசன்துறை ஐக்கியம் அணி 111-102 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஜொலிஸ்ரார் அணியைச் சேர்ந்த சிவதாசும், தொடரின் நாயகனாக காங்கேசன்துறை ஐக்கியம் அணியைச் சேர்ந்த சிரானும் தெரிவானார்கள். (93)

# உடுவில் கோட்ட மட்ட பெரு விளையாட்டு முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்ட மட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளது.

வலைப்பந்து, கால்பந்து, கிரிக்கெட் போன்ற போட்டிகளின் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

**வலைப்பந்து**

15 வயதுப் பிரிவில் முதலாமிடம் யாழ். உடுவில் மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் யாழ். இராமநாதன் கல்லூரி, மூன்றாமிடம் யாழ். ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

17 வயதுப் பிரிவில் முதலாமிடம் யாழ். இராமநாதன் கல்லூரி, இரண்டாமிடம் யாழ். உடுவில் மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

19 வயதுப் பிரிவில் முதலாமிடம் யாழ். இராமநாதன் கல்லூரி, இரண்டாமிடம் யாழ். உடுவில் மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

**கால்பந்து**

15 வயதுப் பிரிவு முதலாமிடம் யாழ். ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், இரண்டாமிடம் யாழ். குப்பிளான் விக்கினேஸ்வரா ம.வி, மூன்றாமிடம் யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**கிரிக்கெட்**

முதலாமிடம் யாழ். இணுவில் மத்திய கல்லூரி, இரண்டாமிடம் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை, மூன்றாமிடம் யாழ். மயிலணி சைவமகா வித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம்**

15 வயதுப் பிரிவு ஆண்கள் முதலாமிடம் யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இரண்டாமிடம் யாழ். இணுவில் மத்திய கல்லூரி.

15 வயதுப் பிரிவு பெண்கள் முதலாமிடம் யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

17 வயதுப் பிரிவு ஆண்கள் முதலாமிடம் இணுவில் மத்திய கல்லூரி, இரண்டாமிடம் யாழ். இணுவில் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

17 வயது பிரிவு பெண்கள் முதலாமிடம் யாழ். இணுவில் மத்திய கல்லூரி, இரண்டாமிடம் யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மூன்றாமிடம் யாழ். இணுவில் இந்துக் கல்லூரி.

19 வயதுப் பிரிவு ஆண்கள், முதலாமிடம் இணுவில் மத்திய கல்லூரி, இரண்டாமிடம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மூன்றாமிடம் இணுவில் இந்துக் கல்லூரி.

19 வயதுப் பிரிவு பெண்கள் முதலாமிடம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இரண்டாமிடம் யாழ். இணுவில் மத்திய கல்லூரி, மூன்றாமிடம் யாழ். இணுவில் இந்துக் கல்லூரி.

## இன்றைய கிரிக்கெட்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் ஆண்டு தோறும் நடத்தப்படுகின்ற அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்மத் தொடர் இன்றைய தினம் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரில் யாழ். பல்கலைக்கழக அணியுடன் கே.சி.சி.சி, யாழ். சென்றல், ஜொனியன்ஸ் ஆகிய அணிகள் மோதுகின்றன. இன்றைய தினம் நடைபெறும் முதலாவது போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கே.சி.சி.சி. அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

மணியந்தோட்டம் முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு மணியந்தோட்டம் ஐந்தாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளிப் பொறுப்பாசிரியர் செல்வி. இந்துமதி தலைமையில் நடைபெறும் இப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் ரவீந்திரதாசன் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறார்களின் வண்ணமயாமான பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதால் பெற்றோர்கள், அயலவர்கள், விளையாட்டு ஆர்வலர்களை போட்டியைக் கண்டு களிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

## கலட்டி வெற்றி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வரும் வடமராட்சி லீக்கிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்துத் தொடரின் போட்டி ஒன்றில் கரவெட்டி கலட்டி அணி வெற்றிபெற்றது.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற இப் போட்டியில் கரவெட்டி கலட்டி அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய கரவெட்டி கலட்டி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

லீக் முறையில் இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடரில் 24 அணிகள் மோதுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

## விளையாட்டுப் போட்டி

(கீரிமலை)

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கீரிமலை, வசந்தபுரம், கூவில், சீந்திப்பந்தல், சேந்தாங்குளம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கி வசந்தபுரம் பாரதி சனசமூக நிலையத்தில் யூ.என்.டி.பி.யின் ஆதரவில் விளையாட்டுப் போட்டி ஒன்று இடம்பெற்றது.


தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்ற இப்போட்டிகளில் நான்கு பிரதேசங்களையும் சேர்ந்த மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் எனப் பெருமளவானோர் பங்குபற்றினர்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு போட்டியின் இறுதி நாளான்று வழங்கப்பட்டது. பரிசில்களை வலி. வடக்கு பிரதேச செயலர் ஸ்ரீமோகனன், யு.என்.டி.பி. யின் யாழ். மாவட்ட பொறுப்பாதிகாரி ஞானகணேஸ் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர். (120)



வடமாகாண விளையாட்டுத் திணைக்கள ஆதரவுடன் யாழில் இடம்பெற்ற பெண்களுக்கான கால்பந்துப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியைக் காணலாம். கடந்த 18ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டு முயற்சியின் பலன்




(மீர்பூர்)

ஆசியக் கிண்ணத்தை நாம் கைப்பற்றியது எமது அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி என பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்தார்.

எல்லா வீரர்களும் இறுதி வரை போராடினர். இது ஒரு அற்புதமான வெற்றி. இணைப் பாட்ட இன்னிங்ஸ் முக்கியமானதாக அமைந்தது. மற்ற ஆடுகளத்தில் இருந்து இந்த ஆடுகளம் வித்தியாசமானதாக, வேகம் குறைந்துத (ஸ்லோ) இருந்தது. 225 முதல் 230 ஓட்டங்கள் எடுத்தாலே அது போட்டி அளிக்கக்கூடிய ஓட்ட எண்ணிக்கையாக இருக்கும் என்று நம்பினோம். சுழற்பந்து வீச்சாளர்களும், வேகப்பந்து வீச்சாளர்களும் தங்கள் பணியை சிறப்பாக செய்தனர். மொத்தத்தில் இது கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி. பங்களாதேஷ் அருமையாக ஆடியது. உண்மையிலேயே இது புதிய வங்காளதேச அணி. அவர்களும் வெற்றியாளர்கள் தான் என்றார்.

# தோல்வியால் ஏமாற்றம்



(மீர்பூர்)

ஆசியக் கிண்ணத் தொடரில் நாம் சிறப்பாகவே செயற்பட்டோம். இருப்பினும் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தமை ஏமாற்றம் அளிக்கின்றது என பங்களாதேஷ் அணியின் தலைவர் முஷ்பிகிர் ரகிம் தெரிவித்தார்.

இத்தொடரில் நாங்கள் நன்றாக விளையாடியும்ளோம். மெதுவான இந்த ஆடுகளத்தில் ஓட்டங்கள் எடுக்க கடினமாக இருந்தது. ஷகதத் ஹுசைனின் கடைசி ஓவர் தான் (19 ஓட்டங்கள் விட்டு கொடுத்தார்) ஆட்டத்தின் போக்கையே மாற்றுவதாக அமைந்து விட்டது.

இறுதிப் போட்டியில் விசேட திட்டங்களுடன் நாம் களமிறங்கியபோதும் இறுதி நேரத்தில் அது தகர்ந்து போனமை ஏமாற்றமே. இருப்பினும் இத்தோல்வி எமக்கு மிகுந்த பாடமாக அமைந்திருக்கின்றது. இதன் மூலம் அடுத்து வரும் தொடர்களை சிறப்பாக எதிர்கொள்வோம் என்றார்.

# கப்டனாக கங்குலி



(புதுடில்லி)

புனே வாரியர்ஸ் அணியின் புதிய கப்டனாக, முன்னாள் இந்திய கப்டன் சௌரவ் கங்குலி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐந்தாவது ஐ.பி.எல்., ருவென்ரி 20 கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 4ஆம் திகதி தொடங்குகிறது. இதில் புனே வாரியர்ஸ் அணியின் கப்டனாக யுவராஜ் சிங் இருந்தார். புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள இவர், அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வருகிறார். இவருக்கு பதில் புதிய கப்டன் மற்றும் ஆலோசகராக கங்குலி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து புனே அணியின் உரிமையாளர் சுப்ரதா ராய் கூறுகையில், ஐந்தாவது ஐ.பி.எல். தொடருக்கு புனே அணியின் கப்டன் மற்றும் ஆலோசகராக கங்குலியை நியமித்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இவரது அனுபவம், வெற்றிக்கு நிச்சயம் கைகொடுக்கும் என நம்புகிறேன். இவர், அணியில் இடம் பெற்றுள்ள மற்ற வீரர்களுக்கு சிறந்த முன்னோடியாக இருந்து வழிநடத்துவார் என எதிர்பார்க்கிறேன் என்றார்.

# பொருத்தமான வீரர்



அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளிலும் மூன்றாவது வீரராக விராட் ஹோலி களமிறங்குவதற்குப் பொருத்தமான வீரர் என இந்திய அணியின் முன்னாள் தலைவர் கும்ளே தெரிவித்தார்.

19 வயதுக்கு உட்பட் இந்திய அணியில் இடம்பிடித்தது முதலே விராட் ஹோலியின் ஆட்டத்தை நான் உன்னிப்பாக கவனித்து வருகிறேன். கடந்த ஒரு ஆண்டில் அவரது ஆட்டத்தில் ஏற்பட்ட மாற்றம் என்னை மிகவும் கவர்ந்ததாகும். ஆட்டத்துக்கு தேவையான ஒழுக்கம், உடல்தகுதி என அவர் ஒரு முதிர்ச்சி மிக்க வீரராக உருவெடுத்துள்ளார். அவுஸ்ரேலிய தொடரில் டெஸ்ட் போட்டியில் சதம் அடித்த அவர் அணியில் 3ஆவது வீரராக களம் காணத் தகுதி படைத்தவர்.


# முடிவை தீர்மானிப்பார் சச்சின்

(புதுடில்லி)

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறும் முடிவை, சச்சின் தான் தீர்மானிப்பார் என இந்தியத் தெரிவுக்குழு தலைவர் ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.


ஆசிய கோப்பை தொடரில் சச்சின், சதத்தில் சதம் அடித்து புதிய சாதனை படைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இவருக்கு எனது வாழ்த்துகள். இவர், எப்போது சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவார் என்ற கேள்வி எழுகிறது. இதுகுறித்து சச்சின் தான் முடிவு செய்ய வேண்டும். என்னால் ஒன்றும் கூற இயலாது.

இந்திய அணி, ஆசிய கோப்பை தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது. பொதுவாக விளையாட்டில் வெற்றி, தோல்வி என்பது சகஜமான ஒன்று. இதே இந்திய அணி தான், கடந்த ஆண்டு உலக கோப்பை வென்று சாதித்தது. எனவே தோல்வி குறித்து அதிகம் சிந்திக்காமல், அடுத்து வரும் தொடர்கள்



மீது அதிக கவனம் செலுத்தினால் நல்லது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் விராத் ஹோலி எழுச்சி கண்டிருப்பது வரவேற்கத்தக்கது. வரும் காலங்களில், இவரை போன்ற திறமையான இளம் வீரர்கள் நிறைய பேர் அணியில் இடம் பெறுவார்கள். சிறப்பாக செயற்பட்டு வரும் இவருக்கு கப்டன் பதவி கிடைக்கும் என உறுதியாக கூற முடியாது. ஒரு வேளை கிடைத்தால் நல்ல விடயம். இது அணி நிர்வாகத்தின் முடிவு எனத் தெரிவித்தார்.



இந்திய கிரிக்கெட் வீராங்கனை ஜுலான் கோஸ்வாமிக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது. இந்த விருதை நேற்று முன்தினம் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேலிடமிருந்து பெற்றுக் கொள்வதைக் காணலாம்.

# ஆப்கானிஸ்தான் தகுதி



(டுபாய்)

இவ்வாண்டு இறுதியில் இலங்கையில் இடம்பெறவுள்ள ருவென்ரி 20 உலகக்கிண்ணத் தொடரில் பங்குபற்றுவதற்கு ஆப்கானிஸ்தான் அணி தகுதி பெற்றுள்ளது. 16 நாடுகள் பங்குபற்றி வரும் தகுதிகாண் சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதை அடுத்தே ஆப்கானிஸ்தான் அணி தகுதிபெற்றுள்ளது.

இத்தொடரில் இதுவரை தோல்விகளைச் சந்தித்திராத இரண்டு அணிகளான நபீபியா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்தாடிய நபீபிய அணி 19ஆவது ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது.

நமபீபிய அணி இப்போட்டியில் தோல்வியைச் சந்தித்துள்ள போதிலும், இன்றைய தினம் அயர்லாந்து அல்லது நெதர்லாந்து அணியை இன்னுமொரு இறுதிப் போட்டியில் சந்திக்கும் போது வெற்றி பெற்றால் உலகக்கிண்ண இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

2010ஆம் ஆண்டு கரீபியன் தீவுகளில் இடம்பெற்ற உலகக்கிண்ண ருவென்ரி 20 தொடரில் ஆப்கானிஸ்தான் அணி பங்குபற்றியிருந்தது.

# தென்னாபிரிக்கா நிதான ஆட்டம்

(வெலிங்டன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி நிதானமாக ஆடி வருகின்றது.

நியூசிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான போட்டி நேற்று வெலிங்டனில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி நேற்றைய ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஆட்டமிழக்காது பற்றிஸன் 44, டுமினி 23 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். மற்றும் அம்லா 63



ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

இப்போட்டித் தொடரில் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்திற்கெதிரான டெஸ்ட் இலங்கை அணி அறிவிப்பு

(கொழும்பு)

இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கு இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட தொடரின் முதலாவது போட்டி வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையின் உள்ளூர் போட்டிகளில் அண்மைக் காலமாக மிகச்சிறப்பாகப் பிரகாசித்துவரும் சமர சில்வாவிற்கு இப்போட்டிகளில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. இறுதியாக சமர சில்வா துடுப்பெடுத்தாடிய 12 இனிங்ஸ்களில் 142, 158, 63, 76, 0, 98, 57, 216, 64, 86, 108, 163 என்றவாறான ஓட்டங்களைப் பெற்றுள்ள போதிலும் அவர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

மறுபுறத்தில் பாகிஸ்தானுக்கெதிராக ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இடம்பெற்ற தொடரின் போது புறக்கணிக்கப்பட்டு பின்னர் தென்னாபிரிக்கத் தொடரில் மஹேல ஜெயவர்தனவிற்கு மாற்று வீரராக அழைக்கப்பட்டு போட்டிகளில் பங்குபற்றிய டிலான் சமரவீர அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை அணி விபரம் வருமாறு:

மஹேல ஜெயவர்தன, திலகரட்ண டில்சான், தரங்க பரணவிதான, லகிரு திரிமன்ன, குமார் சங்கக்கார, டிலான் சமரவீர, டினேஸ் சந்திமால், மத்தியூஸ், பிரசன்ன ஜெயவர்தன, சுரங்க லக்மால், தம்மிக்க பிரசாத், சானக வெலகெதர, சுராஜ் ரந்தீவ், ரங்கன ஹேரத்

# மைதானத்தில் மரணம்



(பெங்களூர்)

பெங்களூர் கால்பந்து மைதானத்தில் நடந்த மாவட்ட லீக் கால்பந்து ஆட்டத் தில் மார்ஸ் - தென் மேற்கு ரயில்வே அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் மார்ஸ் அணியில் மாற்றுவீரராக களம் இறங்கி விளையாடிய 27 வயதான வெங்கடேஷ் திடீரென மைதானத்தில் மயங்கி விழுந்தார். மைதானத்தில் அம்புலன்ஸ் வசதி இல்லாததால் சக வீரர்கள் அவரை உடனடியாக ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.

ஆஸ்பத்திரியில் அவரைப் பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டார் என்று தெரிவித்தனர். இதனால் அந்த ஆட்டம் இரத்துச் செய்யப்பட்டது. மைதானத்தில் வீரர் மரணம் அடைந்த இந்த துயரச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அகில இந்திய கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

அத்துடன் இச்சம்பவம் துயரம் நிறைந்ததாக அமைந்திருப்பதுடன் அதற்கு இந்திய கால்பந்து சம்மேளனம் இரங்கல் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிலக்கரி ஊழல்; நாடாளுமன்றம் ஒத்திவைப்பு


(புதுடில்லி)

இந்திய அரசு தனது நிலக்கரிச்சுரங்கங்களை ஏலமுறையை கடைபிடிக்காமல் தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்ததில் மாபெரும் முறைகேடுகள் நடந்திருப்பதாக எதிர்க்கட்சி தலைவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டுக்கும் 2009ஆம் ஆண்டுக்கும் இடையிலான காலகட்டத்தில் அரசு அளித்திருக்கும் இத்தகைய நிலக்கரிச்சுரங்க உரிமங்கள் காரணமாக சுமார் 10 இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேலாக அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாக இந்திய அரசின் தலைமைக் கணக்கு அதிகாரி தனது அறிக்கையில் கூறியிருப்பதாக இந்திய நாளிதழ் தெரிவித்திருக்கிறது.

இந்த அறிக்கை இன்னமும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படாத நிலையில் இந்தத்தகவல் கசிந்திருக்கிறது. ஆனால் இந்தச் செய்தியும் அதிலுள்ள புள்ளிவிவரமும் மிகவும் தவறான தகவல்களை அளிப்பதாகவும், இந்த மதிப்பீடு குறித்த அறிக்கை இன்னமும் தயாராகிக்கொண்டிருப்பதாகவும் இந்தச் செய்தியை புறக்கணிக்கும்படியும் தலைமை கணக்கு அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவில் நிலக்கரி சுரங்கத் தொழில் 1960களில் முற்றாக தேசவுடமையாக்கப்பட்டு, அதில் ஈடுபட அரச நிறுவனங்களுக்கு மட்டுமே உரிமை என்ற சூழல் உருவாக்கப்பட்டது.



ஆனால் கடந்த சில ஆண்டுகளாக நிலக்கரிக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாகவும், மின் தேவை கணிசமாக உயர்ந்துள்ளதன் காரணமாகவும் நிலக்கரி சுரங்கத் தொழிலை நடத்த தனியாரை மத்திய அரசு அனுமதித்தது.

தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் ஒதுக்கீட்டைப் பெற்ற நிறுவனங்களில் பல,அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களாகும். அரசு இயற்கை வளங்களை ஒதுக்கீடு செய்யும் போது முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற விதியை இந்திய அரசு கடைபிடிக்கக் கூடாது என்று செல்லிடத் தொலைபேசி அலைக்கற்றை ஊழல் வழக்கில் உச்சநீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பளித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# காத்திருங்கள்... நேரம் வரும் வரை

இயேசுவின் வாழ்க்கையில் துலங்கிய ஒரு முக்கியமான பண்பு அவர் எப்போதுமே கடவுளின் திருவுளத்திற்கு அமைந்து நடந்ததாகும். கடவுளிடமிருந்து வந்த இயேசு கடவுள் தன்மை கொண்டவராக இருந்தாலும், நம்மைப் போல மனித இயல்பை ஏற்றுக் கொண்டார். கடவுள் அவருக்கு அளித்த பணியை நிறைவேற்றுவதில் இயேசு கண்ணும் கருத்துமாயிருந்தார். அவர் தம் சொந்த விருப்பப்படி செயற்படவில்லை. மாறாக, கடவுள் எதை விரும்பினாரோ அதையே இயேசுவும் தம் விருப்பமாகக் கொண்டிருந்தார். தம்மை அனுப்பிய கடவுள் தம்மோடு இருப்பதை இயேசு எப்போதுமே உணர்ந்திருந்தார். எனவேதான் இயேசு நற்செய்தி அறிவிப்புக்கு இடையிலும் கடவுளோடு தனித்திருந்து இறைவேண்டலில் ஈடுபட்டார். கடவுளுக்கும் இயேசுவுக்கும் இடையே நிலவிய ஆழ்ந்த உறவு அந்த இறைவேண்டல் நேரங்களில் இன்னும் அதிகமாக ஆழப்பட்டிருந்தது.

கடவுளோடு ஒன்றித்திருந்த இயேசு மனிதரோடும் தம்மை ஒன்றுபடுத்திக் கொண்டார். கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்னும் உணர்வு நம்மில் ஆழப்பட வேண்டும். கடவுள் நம்மோடு இருப்பதால் நாம் கடவுளின் குரலுக்குச் செவிமடுப்பது தேவை. கடவுளின் குரலை நம் உள்ளத்திலும் வாழ்வு அனுபவத்திலும் நாம் கேட்டு உள்வாங்கும்போது அக்குரல் நம் இதயத்தில் ஒலித்துக்கொண்டே இருக்கும். இந்த அனுபவம் நம்மில் நிலைக்கும்போது நாமும் கடவுளுக்கு உகந்தவற்றையே செய்திட முன்வருவோம்.

மறையாசிரியர் - ஜெ.அலெக்ஸ்

# ‘கூடுவிட்டு கூடுபாயும்’ உதயகுமார்

அணுஉலை எதிர்ப்பாளர் உதயகுமார், பொலிஸாருக்குப் பயந்து,ஒருமணி நேரத்திற்கு ஒரு முறை, கூடு விட்டு கூடு பாய்வது போல், ஒவ்வொரு வீடாக இரவில் இடம் மாறுவதாக, பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கூடங்குளம் நிலையத்தைத்திறக்க, தமிழக அரசு அனுமதி கொடுத்ததால், விஞ்ஞானிகள் முழு வீச்சில், பணிகளை ஆரம்பித்துள்ளனர். இதேவேளை உதயகுமாரைப் பிடிக்க பொலிஸார் கூடங்குளத் தில் முகாமிட்டு உள்ளனர். ஆனால், அவர்களிடம் பிடிபடாமல், மீனவர் போல் மாறுவேடத்தில், கடல் மார்க்கமாகத் தப்பிக்க உதயகுமார் திட்டமிட்டு உள்ளதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும்; எதிர்வரும் நாட்களில்



மீனவர்களை மீன் பிடிக்க அனுப்புவது போல் அனுப்பிச் விட்டு, அவர்களுடன் உதயகுமார் தப்பி செல்லவுள்ளதாக, உளவுத்துறைக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்நிலையில், அவரின் ஆதரவாளர்கள் சிலர், பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கொடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால், உதயகுமாரின் ஆதரவாளர்களே, அவரைக் காட்டிக் கொடுக்கலாம் என பொலிஸார் நம்பிக்கையுடன் உள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

# “ஜெ” சிந்தனை வெளியீடு

(சென்னை)

தமிழகத்தில் அடுத்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள் குறித்து, தமிழக அரசு தயாரித்துள்ள, “தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023” என்ற ஆவண வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. விழாவில், ஜெயலலிதா தெரிவித்தாவது, இந்த ஆட்சி பொறுப்பேற்றதும், தமிழகத்தை முதல் மாநிலமாகக் கொண்டு வருவதே இலட்சியம் என அறிவித்தேன். அமெரிக்கா குறித்து மார்ட்டின் லூதர் கிங் கொண்டிருந்த கனவைப் போல், நான் தமிழகத்தின் வளர்ச்சி குறித்து கனவை உருவாக்கினேன். தமிழகத்தில் வேலையில்லாத இளைஞர்கள் இல்லை என்ற நிலையை உருவாக்குதல், வறுமையை முற்றிலுமாக ஒழித்தல், அனைத்து பொதுமக்களும் அடிப்படைத் தேவைகளான சுகாதாரம், கல்வி, குடிநீர், உடல் நல மேம்பாடு உள்ளிட்ட அனைத்தையும்



பெற்று, ஒளிமயமான, பாதுகாப்பும் அமைதியும் பெற்று வாழச் செய்ய வேண்டும். அனைவரும் பொருளாதார, சமுதாய மேம்பாடு பெற வேண்டும். இதை அடிப்படையாக வைத்தே, இந்த தொலைநோக்குத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். மேலும் 15 இலட்சம் கோடி ரூபாய் நிதி ஆதாரத்தில், தொலைநோக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் தனிநபர் வருமானம் ஆறு மடங்கு உயர்வதுடன், தமிழகத்தில் புதிதாக 25 இலட்சம் வீடுகள் உருவாகும் என்றும் தெரிவித்துள்ளார்.




# புதுடில்லியில் தீவிரவாதி கைது

பாபர் கல்சா என்ற பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையதாக தீவிரவாதி ஒருவரை டில்லி பொலிஸார் கைது செய்தனர். இந்தியாவில் தடை செய்யப்பட்ட அமைப்புகளுள் பஞ்சாபில் செயற்படும் சர்வதேச பாபர் கல்சா என்ற பயங்கரவாத அமைப்பும் ஒன்று. இந் நிலையில் நேற்று முன்தினம் புதுடில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் மர்ம ஆசாமி ஒருவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் பிடித்து விசாரணை நடத்தியபோது, அவர் பெயர் நரேந்தர் சிங் என்பதும், பாபர் கல்சா அமைப்பைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்தது. இவர் ஜேர்மனி சென்று முக்கிய தீவிரவாதிகளைச் சந்திக்க திட்டமிட்டிருந்ததும் தெரிய வந்தது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# “இன்றுபோய் நாளை வா” இது உங்களுக்கு அல்ல பேய்க்கு

இரத்தக் காட்டேரியை விரட்ட இன்று போய் நாளை வா என்ற வாசகத்தை உபயோகிக்கின்றனர் ஒரு கிராம மக்கள். ஜோலார் பேட்டை கோடியூர் எம்.எம். ரெட்டி தெருவைச் சேர்ந்த சிலர், திருப்பத்தூர் அருகே உள்ள ஒரு கிராமத்தில் இரத்த காட்டேரி சுற்றித் திரிகிறது. இது நள் ளிரவில் வீடுகளுக்குள் புகுந்தால் குடும்பத தலைவன், தலைவியின் இரத்தத்தை குடித்து விட்டு சென்று விடும். ஆதனால் வீட்டிற்கு முன்பு இன்று போய் நாளை வா? என்று எழுதி வைத்து விட்டால் அதனைப் படித்து விட்டு இரத்தக்காட் டேரி சென்று விடும் என்று கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு பின்னர் கோடியூர் பகுதியில் நள்ளிரவில் நெஞ்சை பயத்தில் ஆழ்த்தும் வகையில் சில அறிகுறிகள் தெரிந்ததாம். இரத்தக்காட்டேரி வருவதால்தான் நள்ளிரவில் ஊருக்குள்



நாய்கள் குரைக்கிறது. அலறும் சத்தங்கள் கேட்கிறது என்று பரபரப்பாக பேசப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் இரத்தக் காட்டேரியின் பீதியால் பொதுமக்கள் உறைந்தனர். இதனையடுத்து இரத்தக் காட்டேரியை விரட்ட வீடுகள் முன்பு சிவப்பு நிறத்தில் இன்று போய் நாளை வா? என்ற வாசகங்களை எழுதி வைத்துள்ளனர்.

# பிச்சை எடுத்துப் போராட்டம்

(கரூர்)

கரூரில் மக்கள் நலப்பணியாளர்கள் பிச்சை எடுக்கும் போராட்டத்தை நடத்தினர். தமிழகத்தில் உள்ள கிராமப் பஞ்சாயத்துக்களில் பணிபுரிந்து வந்த 13 ஆயிரத்து 500 மக்கள் நலப்பணியாளர்களை அ.தி.மு.க. அரசு பதவியில் இருந்து நீக்கியது. அதை எதிர்த்து மக்கள் நலப்பணியாளர்கள் சார்பில் உச்ச நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் மக்கள் நலப்பணியாளர்களுக்கு பணி வழங்க உத்தரவிட்டது. ஆனால் தொடர்ந்து அ.தி.மு.க. அரசு பணி வழங்காமல் இழுத்தடித்து வருவதால் மக்கள் நலப் பணியாளர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் பிச்சை எடுக்கும் போராட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனைத் தடுக்க பொலிஸார் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதும் ஒரு சில இடங்களில் போராட்டத்தை நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இயங்காத மருத்துவமனைக்கு பராமரிப்புச் செலவு ஒருகோடி ரூபா

(பானாஜி)

கோவா மாநிலத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக செயற்படாமல் இருந்த மருத்துவ மனையின், பராமரிப்புப் பணிக்காக மட்டும் ஒரு கோடி ரூபாய் செலவழித்து இருப்பதாக கணக்கு காட்டப்பட்டுள்ளது. கோவா மாநிலத்தில் கடந்த காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற போது நியூ மபூசா மாவட்டதில் அரச மருத்துவமனை ஒன்று 230 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டது. சுமார் 49.91 கோடி மதிப்பீட்டில் கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முழுமையாக கட்டப்பட்டது. தொடர்ந்து 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வந்தது. பொது மக்களின் வசதிக்காக விலை உயர்ந்த பல உபகரணங்கள் வாங்கி வைக்கப்பட்டது. இவை அனைத்தும் மருத்துவ மனை திறக்கப்பட்ட அன்றைய தினத்தில் அரை நாள் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. அதன் பின்னர மருத்துவமனை இழுத்து மூடப்பட்டது. இருப்பினும் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக தனியார் ஒப்பந்தக்காரர் மூலம் துப்புரவு மற்றும் பராமரிப்பு பணிகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதற்காக மட்டும் செலவிடப்பட்ட தொகை சுமார் ஒரு கோடி எனக்காட்டப்பட்டுள்ளதாக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சீனாவின் போர் ஒத்திகை

(பீஜிங்)

இந்திய எல்லையை ஒட்டியுள்ள திபெத் மலைப்பிரதேசத்தில் சீன விமானப் படையினர் குண்டுகளை வீசி போர் ஒத்திகை நடத்தி வருகிறார்கள். இந்த ஒத்திகையில் சீனாவின் ஜெ-10 ரக குண்டு வீச்சு விமானங்கள் ஈடுபடுத்தப் பட்டன. திபெத்தில் 3,500 அடி உயரமுள்ள பீட பூமியில் இந்த ஒத்திகை நடைபெறுவதாகவும், இது போன்ற ஒத்திகை நடைபெறுவது இதுவே முதல் தடவை என்றும் அதிகாரிகள் தெரிவித் ததாக சீன செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் இரவு பகலாக நடைபெற்ற இந்த ஒத்திகையின் போது லேசர் துணையுடன் கூடிய குண்டுகளை குறிப்பிட்ட இலக்கில் வீசி வெற்றிகரமாக தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.



இந்த ரக போர் விமானங்கள் உயரமான மலைப்பகுதியில் (ஒட்சிசன் குறைவாக இருக்கும் இடம்) சென்று குண்டு வீசும் திறன் படைத்தது என்றும் கூறப்படுகிறது.

# பின்லேடனின் மனைவியைச் சந்திக்க சகோதரருக்கு சிறப்பு அனுமதி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் அபோதாபாத்தில் இருந்த அல்-கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் கடந்தாண்டு மே மாதம் அமெரிக்கப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது அந்த வீட்டில் இருந்த அவரது மூன்று மனைவிகள் மற்றும் குழநதைகளைப் பாகிஸ்தான் அரசு பிடித்துச் சென்றது.

பாகிஸ்தானுக்குள் திருட்டுத்தனமாக நுழைந்ததாக இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு இஸ்லாமாபாத் நகரில் வீட்டுக்காவலில் வைக்கப் பட்டுள்ளனர். குற்றம் நிரூபிக்கப்பட்டால் இவர்களுக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை கிடைக்கும். இதேவேளை பின்லேடனின் இளைய மனைவி அமால்(ஏமன் நாட்டை சேர்ந்தவர்) மற்றும் அவரது 5 குழந்தைகளையும் சந்தித்து பேச அதிகாரிகள் அனுமதி கொடுக்க மறுத்து விட்டதாக அமாலின் சகோதரர் சகாரியா அகமத் இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த மனுவை நீதிபதி அன்வார் காசி விசாரித்து, தங்கையையும், அவரது குழந்தைகளையும் சந்தித்து பேச சக்காரியாவுக்கு அதிகாரிகள் அனுமதி அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். மேலும் சந்திக்க அனுமதிக்கா விட்டால் அது தொடர்பாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தாக்கல் செய்யலாம் எனவும் தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# இஸ்ரேலில் ஒல்லியான பெண்கள் விளம்பரங்களில் தோன்ற முடியாது



(டெல்அவிவ்)

இஸ்ரேல் அரசு ஒல்லியாக இருக்கும் மொடல்களின் விளம்பரங்களைத் தடை செய்யும் வகையில் புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது.

இஸ்ரேல் மக்களிடம் உணவுப் பழக்க வழக்கங்கள் திட்டமிட்டபடி இல்லை, நேரத்திற்குச் சாப்பிடுவதில்லை. நினைத்த நேரத்தில் சாப்பிடுவது, கண்டதையும் உண்பது போன்றவற்றால் பலர் உடல் நலம் பாதிக்கப்படுகின்றனர். இதைத் தடுக்க இஸ்ரேல் அரசு பல்வேறு சுகாதாரத் திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது.

எனினும் மக்களிடம் உணவுப் பழக்க வழக்கம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படவில்லை. இதையடுத்து மெல்லிய உடல்வாகுடன் கூடிய மொடல் அழகிகளுடன் வெளிவரும் விளம்பரங்களைத் தடை செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான சட்ட்ம் கடந்த 19ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இந்தப் புதிய சட்டத்தின்படி விளம்பரங்களுக்கு மொடல் அழகிகள் போஸ் கொடுக்கும் போது மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். எனினும் இந்தச் சட்டம் இஸ்ரேலில் வெளிவரும் வெளிநாட்டு இதழ்களுக்கு பொருந்தாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், மெல்லிய உடல்வாகு கொண்ட அழகிகளின் விளம்பரங்களுக்குத்தடை விதிக்கப்பட்டுள்ளதால், இனிமேல் ஆரோக்கியமான பெண்களின் படங்களை விளம்பரங்களில் பயன்படுத்துவார்கள். அதன் மூலம் மக்களிடம் உணவுப் பழக்கம் குறித்து விழிபபுணர்வு ஏற்படும் என்று நம்புகிறோம் என்கின்றனர்.

# அமெரிக்கப் படைவீரருக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானின் கந்தஹாரில் பொது மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட அமெரிக்க படைவீரருக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. ரொபேட் பேலிஸ் என்ற குறித்த படைவீரர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்வடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஒன்பது சிறுவர்கள் மற்றும் மூன்று பெண்கள் உள்ளிட்ட 16 பேர் குறித்த சம்பவத்தில் கொல்லப்பட்டதை அடுத்து இரு தரப்பு உறவுகள் பாதிக கப்பட்டிருந்தன. இந்தச்சம்பவத்தை அடுத்து 38 வயதான ரொபேட் பேலிஸ் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க இராணுவச் சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த வழக்கில் அவர் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் மரண தண்டனை விதிக்கப்படலாம் என சர்வதேச தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

# "நாங்கள் விசுவாசம்" என சத்தியப் பிரமாணம் செய்யவேண்டும்





(பீஜிங்)

ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு விசுவாசமாக செயற்படுவோம் என சட்டத்தரணிகள் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டுமென சீனா அறிவித்துள்ளது. தொழிலுக்கான உரிமையைப் பெறுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு நாட்டிற்கும், நாட்டின் தலைமைத்துவத்திற்கும் விவாசமாகச் செயற்படுவோம் என சட்டத்தரணிகள் உறுதியளிக்க வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நகர்வு சட்ட அடிப்படை அற்றதும், முறையற்றதும் என விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளதுடன், சட்டத்தரணிகள் மீதான அழுத்ததை அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இந்தச் சத்தியப் பிரமாணம் சட்டத்தரணிகளின் அரசியல், நிபுணத்துவம் மற்றும் தார்மீக தரத்தை உயர்த்தும் என சீனா அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. தமது சான்றிதழ்களைப் பெற்று மூன்று மாத காலத்துக்குள் இந்த சத்தியப் பிரமாணத்தை சட்டத்தரணிகள் எடுக்க வேண்டுமென சீன அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

# மெய்தான் பாருங்கோ...

## அந்நியமாய் போன வாழ்க்கை



இப்ப கிட்டடியில ஒரு கலியாண வீட்டை போனனான் பாருங்கோ. என்ர மனிசியின்ர தூரத்து உறவுமுறை. கொஞ்சம் வசதியான ஆட்கள் கண்டியளே! வறுமையெண்டால் எண்ணெண்டு தெரியாமல் வளந்த வையள். வீட்டில வளக்கிற 'பொக்கெற் நாய்'க்கு கிறீம் பிஸ்கெற்றும் பசுப்பால் ஊட்டியும் வளக்கிற ஆட்கள்... எனக்கும் அவையளுக்கும் எட்டாப் பொருத்தம்... ஏதோ என்ர மனிசி "வாங்கோ போட்டு வருவம்" எண்டு சொன்னதால போக வெளிக் கிட்டன். வெளிக்கிட்டு அங்கை போனாப் பிறகுதான், ஏன் இவளோடை அள்ளுப்பட்டு வந்தன்... எண்டு நினைச்சன். ஏனெண்டு கேட்கிறியளே? சரி! சொல்லுறன்.

நாங்கள் வன்னியில இருந்த காலத்தில உந்தப் பிரச்சினையளால பாதையும் பூட்டுப்பட்டு, பொருளாதாரத் தடையையும் அரசாங்கம் விதிச்சதால எங்கட ஒவ்வொரு உறவு முறையள்ள இருந்தும் நாங்கள் அந்நியப்பட்டுப் போனம் பாருங்கோ. பிறகு இடைக்கிடை நடந்த ஒப்பந்த காலங்களிலையும் போர் நிறுத்த நேரங்களிலையும் சொந்த பந்தங்களைப் பாக்கேலாமல் போச்சுது.

பேந்து நாலாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய கையோட பாதையளும் பூட்டப்பட்டு, ஒருத்தரையொருத்தர் பாக்கவும் முடியாப்போயிட்டுது. ஒரு தேசத்தில... ஒருமண்ணுக் குள்ள... இப்பிடியும் ஒரு தலைவிதியோ... எண்டு எங்களை நாங்கள் நொந்தாலும் மனதளவில ஆறுதல் படுத்திக் கொண்டிருந்திட்டம்.

வன்னிப்பெருநிலப் பரப்புக்குள்ள வெளியுலகம் தெரியாத கிணத்துத் தவளையள் மாதிரி... கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலைக் கைதியள் போல நாங்கள் வாழவேண்டிய நிர்ப்பந்தமாப் போச்சுது எங்கட வாழ்க்கை பாருங்கோ!

அப்ப 'போன்' எண்டால் என்னெண்டு தெரியாத ஆட்களும் இருந்தவை. கடிதங்கள் ஆரேன் போட்டால் அது உந்த ஊருலகம் முழுக்கச் சுத்திப்போட்டு வரும். உப்பிடித்தான் பாருங்கோ யாழ்ப்பாணத்தில நடந்த ஒரு செத்தவீடு குறிச்சு ஓராள் வன்னியில இருக்கிற தன்ர உறவு முறைக்காரர் ஒருவருக்கு 'தந்தி' அனுப்பினவர். அந்தத் தந்தி ஒவ்வொரு இடமாச்சென்று சுத்தினபடி... செத்தவற்ர அந்தியேட்டிக்கிரியை நடக்கேக்கைதான் வன்னிக்குப்போய் சேந்துது.

இப்பிடி எத்தனையோ சங்கதியள்... ஆமிக்கும்- பொடியளுக்கும் அடிபாடு நடந்து கொண்டிருக்க வன்னி யில இருந்தவை ஒருபக்கம், வன்னிக்கு வெளியால வாழ்ந்தவை இன்னொருபக்கமுமாச் சீவிச்சுக்கொண்டிருக்க, இடையில உறவு முறையள்ள ஒரு இடைவெளிவிரிசல் விழுந்துபோச்சுது.

இந்த விரிசல் பாருங்கோ! வசதிவாய்ப்புக்கள் இன்னும் அதிகமாச் சேர உறவெண்ட பந்தத்துக்காப்பால... ஊரவனெண்ட உணர்வுக்கப்பால கொஞ்சம் ஒதுக்கிவைச்சதோட உதாசீனப்படுத்தவும் தொடங்கியிட்டினம். வலிகாம இடப்பெயர்வோட தஞ்சமெண்டு ஓடிவந்த ஆட்கள், ரணில்- பிரபாகரன்ர ஒப்பந்தத்தோடு தங்கட ஊருக்குப் போய் ஆமியின்ர கட்டுப்பாட்டுக்குள்ள இருந்து கொண்டு,வெளிநாட்டு வசதியள்...வேலைவாய்ப்புகள்... எண்டு வளர்ச்சியடைஞ்சிருக்கினம். இப்ப அந்தரிச்சு ஓடிவந்த இடத்தில அடைக்கலம் தந்த இடங்களை மனதார மறந்து போயிட்டினம் கண்டியளே!

மனிசியோட போன எனக்கு, கலியாண வீட்டில உதுகளைத் தான் நான் கண்ணால பாக்கவேண்டிக் கிடந்தது. கலியாண வீட்டுச்சொந்தக்காரன் வன்னியில இருக்கேக்கை எவ்வளவு கஷ்டப் பட்டவன்... எண்டது எனக்கும் மனிசிக்கும்தான் தெரிஞ்ச விசயம்.

இப்ப என்னடாவெண்டால் அவருக்கு பணம் 'கண்பார்வை'யை மறைச்சுப்போட்டுது. கடந்த காலத்தில பட்ட கஷ்டங்களும் அந்தக் கஷ்டத்தைப் போக்கிறதுக்கு கைகொடுத்து உதவிய ஆட்களையும் அவர் மறந்து போனார் பாருங்கோ! இரண்டு பொடியள் வெளிநாட்டில. கடைசிப்பெட்டையை இப்ப கட்டியிருக் கிறவன்ர, சகோதரங்களும் வெளியில. அதில ரண்டுபேர் 'சிற்றிசன்' வாங்கின ஆக்கள். பணம் பணத்தோட சேந்ததில வீட்டுக்காரனுக்கு மெத்தப்புளுகமும் பெருமையும் அவன்ர முகத்திலையும், செய்கை காரியங்களிலையும் தெரிஞ்சுது பாருங்கோ.

மணவறையில மணப்பெண்ணுக்கு தலையில அறுகும் பாலும் வைக்கிறதிலயிருந்து , தாலிகட்டின பிற்பாடு அறுகரிசி போட்டு ஆசீர்வதிக்கிற வரைக்கும் என்னைப் போல இன்னும் கொஞ்சப்பேர் அந்தப் பந்தலுக்கை அந்நியப்பட்டுப் போயிருந்தம் பாருங்கோ. பட்டபின்னால ஞானம் வெளிக்கிறமாதிரி, கலியாண வீட்டில பட்ட அவமானத்துக்குப் பிறகு எனக்கொரு உண்மை வெளிச்சுது.

வீட்டுக்காரன் எல்லாருக்கும் கலியாண வீட்டுக்குச் சொல்லிக் கூப்பிட்டது உறவு முறைக்காக அல்ல. தனது பணப்புளிப்பையும், தனது சம்பந்தி வீட்டாரின் செல்வச் செழிப்பையும் காட்டிக் கொள்ளுறதுக்குத்தான்.

பாத்தியளே இந்தப் பணமெண்டது உறவுமுறையளை எப்படி அந்நியப்படுத்தி வைச்சிருக்கெண்டதை!

- **சின்னக்குட்டி சின்னச்சாமி.**

# ஊதுகிற சங்கு

பாரதிராமன்

பிரபல ரஷ்ய டென்னிஸ் வீரர் கோ.ஃபல்னிகோவ் ஃப்ரெஞ்ச் ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் வென்றவுடன் பரீஸ் நகரப் பார்வையாளர்களுக்கு நன்றி கூறியபோது ஆங்கிலத்தில் பேசினார். அவரிடம் தோல்வியுற்ற மைக்கேல் ஸ்டிச் அடுத்துப்பேசும் போது ஃப்ரெஞ்ச் மொழியில் பேசி கூட்டத்தினரிடம் பலத்த கைதட்டல் பெற்றார். மொழி தெரியாது தவித்துக் கொண்டிருந்த கோ.ஃபல்னிகோவைப் பார்த்து 'நீங்கள் சீக்கிரம் ஃப்ரெஞ்ச் கற்றுக்கொள்ளுங்கள்' என்று கூறிவிட்டு அவர் மேலும் பலத்த கைதட்டல்கள் பெற்றார்.

அப்போது கோ.ஃபல்னிகோவ் இதே போட்டியும் வெற்றி விழாவும் மொஸ்கோவில் நடைபெற்றிருந்தால் ரஷ்ய மொழியை விரைவில் கற்றுக்கொள்ளும்படி மைக்கேல் ஸ்டிச்சை கேட்டுவிட்டு மிகப் பலத்த கைதட்டல்களை ரஷ்யப் பார்வையாளர்களிடமிருந்து தான் பெற்றிருக்க முடியுமே என்று எண்ணியிருககக்கூடும்.

உண்மைதான், மொழி விசுவாசமோ, கர்வமோ, வெறியோ இன்று அந்த அளவிற்குப் போய்விட்டிருக்கிறது உலக விளையாட்டு அரங்கிலேயே. மொழி எங்குமே, என்றுமே பிரச்சினைதான். கற்பதற்கு கடினம் என்பது ஓரளவு உண்மை என்றால், தமிழை எளிமைப்படுத்துவது எப்படி?

எல்லா முன்னேற்றச் செயல்களுக்கும் வெறும் ஆர்வம் மட்டுமே போதாது. திறந்த மனம், பரந்த நோக்கு, சமரச பாவம், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, பெரும்பான்மையோடு ஒத்துப்போதல், சிறுபான்மை கருத்துக்களாயினும் சீர்தூக்கிப் பார்த்தல், இவற்றோடு பழைமைகளின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபடும் துணிச்சலும், முட்டுக்கட்டுகளை முறியடித்து மக்களை ஈர்க்கும் வழிகாட்டுதலும் மிகவும் தேவை. இவை அமைய நாம் அனைவரும் கூடி முயற்சிப்போமானால் தமிழின் முன்னேற்றத்தை எவர் தடுக்கமுடியும்?

இன்னமும் சங்க காலப் பெருமைகளைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பது நமக்குப் பெருமையல்ல. நமக்குப் பின்னால் ஓட ஆரம்பித்தவர்கள் நம்மைக் கடந்து வெகு தூரம் சென்றுவிட்டார்கள். அவர்களைக் கடக்க முடியுமோ இல்லையோ அவர்களை எட்டிப் பிடிக்கும் அளவுக்காவது நாம் ஓடியாக வேண்டும்.

சங்கத் தமிழ் நமது பொக்கிஷம் தான். ஆனால் அவற்றிலிருப்பது போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய பழைய காலத்து முத்திரைக் காசுகள், இன்றைய உலகச் செலாவணிக்கான டொலர் நோட்டுகள் அல்ல. பல்வேறு மொழிகளை உருவாக்கிய ஆதிகால வல்லுநர்களை நாம் போற்றக் கடமைப் பட்டுள்ள அதே நேரத்தில், ஒரு புதிய மொழியைத் தோற்றுவித்தபோது ஏற்கனவே இருந்த மொழியாளர்களிடம் 'எங்களுக்குத் தேவையான சொற்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள், நாங்களும் உங்கள் மொழியையே ஏற்றுக் கொள்கிறோம்' என்று அவர்கள் சமரசம் பேசத் தவறிவிட்டார்களே என்ற வருத்தமும் நமக்கு ஏற்படுகிறது.

மக்களின் வழக்காற்று மொழிக்கும் அறிஞர்களின் இலக்கியப் புலமை சார்ந்த மொழிக்கும் இடையே ஏற்பட்ட வேறுபாடுகளும், கிராம, நகர, காட்டு மாந்தர் ஆகியோர்களுக்கிடையே கிளைத்த வேற்றுமைகளின் வெளிப்பாடுகளும், விரிவடைந்துகொண்டே வந்த மனித நாகரிகத்தின் தேவைகளும் மொழிகளின் திரிபுகளுக்கும் பிளவுகளுக்கும் காரணமாக இருந்திருக்கலாம்.

இவைகளையெல்லாம் மொழி ஆராய்ச்சிக்காரர்களிடம் விட்டுவிட்டு இன்றைய இருப்பில் குறைந்தபட்ச இழப்புக்களுடன் நமது மொழியை வளப்படுத்துவது எப்படி என்பதை மட்டும் நாம் கருத்தில் கொண்டு தொடர வேண்டியிருக்கிறது.

நல்ல வேளையாக நம் தமிழ் மொழிக்கான இலக்கணம் எளிமையானதாகவே அமைந்திருப்பதால் இத்துறையில் அதிகமான மாற்றங்கள் தேவைப்படாது. நன்னூலில் விவரிக்கப்பட்டுள்ள எழுத்து, சொல் அதிகார விதிகள் இன்றும் கடைபபிடிக்க முடிந்தவைகளாக உள்ளன. இருப்பினும்,சில எழுத்துகள் மொழி முதலாகா என்ற விதிகளை முன்னிறுத்தி இராமன், இலட்சுமணன், இடம்பம் என்று எழுத வேண்டியிருப்பதை தளர்த்திக் கொண்டு சொற்களைப் பேசுவது போலவே எழுதுவதை அனுமதிக்க வேண்டும்.

எழுதியபடியே உச்சரிப்பு இருக்க வேண்டுமென்றாலும் சில சமயங்களில் உச்சரிப்பு எழுத்தினின்றும் மாறுபடுகிறது. பழக்கத்தின் வாயிலாக தமிழர்கள் சில உச்சரிப்புகளைச் சரியாகச் செய்தாலும், தமிழை புத்தகத்தின் மூலம் கற்பவர்களும் அவ்வாறு செய்ய இயலுமாறு அவற்றுக்கான வரிவடிவங்கள் இல்லை. வட இந்திய மொழிகள், தமிழ் நீங்கிய தென்னிந்திய மொழிகளில் இக்குறைபாடுகள் இல்லாமைக்குக் காரணம் அவை ஒவ்வொரு மெய்யெழுத்து வரிசையிலும் நான்கு ஒலி பேதங்களைக் குறிக்கும் வரிவடிவங்களை ஏற்றுக்கொண்டதுதான். உதாரணமாக தமிழில் படம் (PADAM), பலம் (BALAM), பயம் (BHAYAM) என்ற சொற்களில் உள்ள ப என்ற எழுத்தை வெவ்வேறு ஒலிகளில் உச்சரித்தாலும் எழுத்து வடிவத்தில் ஒரே விதமாகவே எழுதுகிறோம். இதை வேறுபடுத்திக் காட்ட ப,ப (ஒரு அடிக்கோடு), ப (இரண்டு அடிக்கோடு) என்று அடிக்கோடுகளைப பயன்படுத்தலாம்.

திராவிடத்தன்மை மேலிட மேலிட நாம், தமிழிலிருந்து ஜ,ஸ,ஷ,க்ஷ,ஹ போன்ற எழுத்துக்களை நீக்கிவிட்டோம். அவை தனியான ஒலி அமைப்புகளைக் கொண டிருப்பதால் தூய்மை என்ற பெயரில் சுத்தமாய் அவற்றை நீக்கிவிட்டு ச, க, ட்ச, அ என்ற எழுத்துக்களே போதும் என்று எண்ணுவது சரியல்ல. தமிழர் களில் நிறைய முஸ்லிம் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்களிலும் பேச்சிலும் இவ்வெழுத்துக்களின் ஒலி நிறையவே இருப்பதால் இவை தமிழுக்குத் தேவையே.

வேறு சில எழுத்துக்களைப் புறக்கணிப்பதும் பகிரங்கமாகவே நடந்து வருகிறது. நமது டி.வி. அறிவிப்பாளர்களும் நாடக நடிகர்களும் தமிழுக்கு ல ள தேவையில்லை என்று மக்களை சுலபமாக நம்பிக்கை கொல்ல வைத்திருக்கிறார்கள். தமிளனுடைய ள ழவுக்கும் ஆபத்து வந்துகொண்டிருக்கிறது. இந்தப் போக்கையும் நிறுத்த வேண்டும். ஒலிக்கு ஏற்ற வகையில் எழுத்துக்களை அமைத்துக்கொள்வதில் எந்தவிதமான மானப்பிரச்சினையும் இருக்க முடியாது.

இன்னும் F, Z குறிக்கும் ஒலிகளுக்கான வரிவடிவங்களையும் தமிழ் ஏற்க வேண்டும்.

தொலைநோக்குடன் பார்க்கும் போது ஆங்கில மொழிக்கான ரோமானிய எழுத்துக்களையே நாம் சுவீகரிப்பது உலக விவகார அளவில் பயனுள்ளதாக அமையும். அதிலும்கூட நமக்குத் தேவையான சில மாற்றங்களைச் செய்து கொள்ளலாம். உதாரணமாக ஆ என்ற நெடிலைக் குறிக்க A என்றும், ண் என்பதை N என்றும் இவ்வாறே ள், ற், ஆகியவற்றை L, R என்றும் குறிப்பிட்டு எழுதலாம். அதே போல ரோமானிய எழுத்தில் ழ வரிவடிவத்தை ஏற்கலாம். தற்போதைய சமஸ்கிருத ஆங்கில இணைப்பு நூல்கள் பலவற்றில் சமஸ்கிருத உச்சரிப்பைப் பிரதிபலிக்கும் வண்ணம் ஆங்கில எழுத்துக்களில் சில குறியீடுகள் தரப்பட்டு வருகின்றன. இவையும் இந்த வகையில் உபயோகமாக இருக்கும். மேலும் கணினி உபயோகத்தை மனதில் கொண்டு அதற்கேற்றவாறு இக்குறிகளை அமைத்துக்கொள்ளலாம்.

ஆங்கில மொழியிலும் உச்சரிப்பு, வரிவடிவக் குறைபாடுகள் உண்டு. PUT என்றால் புட், CUT என்றால் கட். SANJOSE ஸேன்ஜோஸ் என்று எழுதவேண்டும் SANOSAY ஸேனோஸே என்று படிக்கவேண்டும். இப்படி எவ்வளவோ. தம் மொழியில் எழுத்துக்கள் குறைவு என்று எண்ணியோ என்னவோ ஆங்கிலேயர்கள் ஒவ்வொரு எழுத்துக்கும் நான்குவித வரிவடிவங்களை அமைத்துக்கொண்டனர். கொட்டை எழுத்து, அச்சு எழுத்து, அலங்கார எழுத்து, தொடர் எழுத்து என வகைப்படுத்தினர். அச்சு எழுத்துக்கள் அச்சிலும், தொடர் எழுத்துக்கள் எழுதுவதிலும் மட்டுமே பயன்படுத்தப்படுவதால் குளறுபடிகள் ஏதும் ஏற்படுவதில்லை. இவைகளும்கூட காலத்தின் தேவைக்கேற்ப மாற்றப்படக்கூடியவைதான்.

பேச்சிலுள்ள ஒலிகளுக்கேற்ப வரிவடிவங்களை அமைத்துக்கொள்வதாலும், எழுதுகிறபடியே உச்சரிப்பதாலும், இலக்கண விதிகளைப் பேச்சு வழக்கிற்கேற்ப மாற்றிக்கொள்வதாலும், உலகம் முழுவதும் பின்பற்றக்கூடிய ரோமானிய வரிவடிவங்களைத் தேவையான மாற்றங்களுடன் ஏற்றுக் கொள்வதாலும் நம் தமிழ் மொழி எளிமைப்படும். பல்லாயிர வருஷங்களாக உயிர்த்துவரும் நம் மொழியை இம்மாற்றங்கள் பலப்படுத்துமே தவிர பலவீனப்படுத்தா.

சங்க காலச் சொற்களின் பொருள் இன்றும் மாறாதிருந்தாலும் அக்காலத்திய பல சொற களுக்கு இன்று தேவை ஒழிந்து பேச்சுவழக்கற்றுப் போயிருக்கிறது. இன்னொருபக்கம் பிரம்மாண்டமான விஞ்ஞான வளர்ச்சி, மற்றும் மனித நாகரிகத்தின் முதிர்ச்சி காரணமாக ஏராளமான புதிய சொற்கள் இதுவரை அறிந்திராத குறிப்பிட்ட பொருள் பொதிந்தனவாக புனையப்பட்டிருக்கின்றன.

இவை அனைத்தும் ஆங்கிலம், ஃபிரெஞ்ச், ஜேர்மன் போன்ற முன்னேறியுள்ள ஐரோப்பிய மொழிகளிலேயே உள்ளன. நம் அன்றாட வாழ்விலும், உலக நாடுகளுடனான தொடர்புவாழ்விலும், எல்லாத் திசைகளிலுமான முன்னேற்றங்களுக்கும் அத்தியாவசியமாகிவிட்ட புதிய பொருட்கள், தன்மைகள், செயற்பாடுகள், விளக்கங்கள் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களை நம் மொழியிலும் கொள்ளவேண்டியது மிகவும் அவசியம்.

இதை எப்படிச் செய்வது என்பதில் பல கருத்துகள் இருக்கலாம். ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் மூலச் சொல்லை (அது லத்தீனோ கிரேக்கமோ) அடையாளம் தெரிந்துகொண்டு அதற்கு நேரான தமிழ்ச் சொல்லை கண்டு கொள்வது அல்லது உருவாக்குவது என்பது ஒன்று. மாறாக புதிய ஆங்கிலச் சொற்களை அப்படியே அகப்படுத்திகொள்வது என்பது மற்றொன்று. இரண்டையும் கலந்து உபயோகிப்பது என்பது வேறொன்று.

புதிய சொற்களுக்காக எதற்கு ஆங்கிலத்தை நாடவேண்டும்? நம்மாலேயே ஆக்க முடியாதா? என சில தமிழ் வல்லுநர்கள் கேட்கலாம். முடியும் தான். டிங்கிரி டிங்காலே, டோலாக்கு டோல்டொப்பிமா, அசக்குன்னா அசக்குதான் என்ற பொருள் பொதிந்த வார்த்தைகளை ஆக்கமுடிகின்றபோது மற்றவையெல்லாம் எம்மாத்திரம்?

மேலும் நமக்கு இப்போது காத்திருக்க நேரமில்லை. எனவே நமது அனுபவங்களுக்கு ஒத்துவருவதும் விரைவில் நம் மொழியில் கலந்துவிடக்கூடியதுமான வழிமுறையையே நாம் தேர்ந்தெடுக்கவேண்டும்.

சைக்கிள் என்பதை துவிச்சக்கரவாகனம், இருசக்கரவண்டி, ஈருருளி, மிதிவண்டி என்று மொழி பெயர்ப்பதால் உடனடியாக அவற்றைப் பயன்படுத்த ஆரம்பித்து விடுவார்களா? எல்லா மொழிகளிலுமே ஆங்கிலத்தின் தாக்கம் பரவலாக இருக்கிறது. அதனால் நமது மொழிகளுக்குள் அகப்படாத வார்த்தைகளுக்காக காலத்தை விரயம் செய்யா மல் புதிய ஆங்கிலச் சொற்களை அப படியே ஏற்றுக்கொள்வதில் எந்த சிரம மும் இருக்காது. வெட்கப்படவும் தேவையில்லை.

மொழிகளுக்குள் இரகசியம் தேவையில்லை. பள்ளி நாட்களில் இரகசியமாகப் பேசிக்கொள்ள சில உத்திகளை நாங்கள் கையாண்டதுண்டு. 'சீனு! சினிமா போலாமா' என்பதை 'கசீ கனு! கசிகனிகமா கபோகலா கமோ' என்றோ, 'னீசூ! னிசிமா லோபாமா' என்றோ, 'னூசீ! மானிசி மாலாபோ' என்றோ பேசிக்கொள்வோம் வேகம் பழகிக்கொண்டு. மற்றவர்களுக்குப் புரியாதபடி பேசுவதில் ஒரு கர்வம் இருந்தது. இன்று எல்லாமே வெளிப்படை. அரசாங்கக் காரியங்கள் (ஊழல்கள் உள்பட) எல்லாமே வெளிச்சத்தில் நடக்கின்



றன. மொழிக்கு மட்டும் இரகசியம் என்ன வேண்டிக்கிடக்கிறது? எல்லா மொழிகளையும் எல்லா மொழிக் காரர்களும் பேசவேண்டும் என்பது தானே நமது குறிக்கோள்?

இவ்வளவு சிக்கல்களைத் தீர்த்து விட்ட பின்பும் இன்னொரு பெரிய சிக்கலிலிருந்து நம்மால் மீளமுடியுமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. எழுதுவதைப்போலவே பேசுவது, அவ்வாறே பேசுவதைப்போல எழுதுவது என்று சங்கற்பித்துக் கொண்டாலும் நாம் பேசப்போவதும் எழுதப் போவதும் எந்தத் தமிழ்? கொங்கு நாட்டுத்தமிழா, மதுரைத்தமிழா, யாழ்ப்பாணத்தமிழா, சிங்கை, மலேசிய, மொரீஷஸ் தமிழா, அல்லது சென்னைத தமிழா என்பதில் பெரும் சிக்கல் எழ வாய்ப்புள்ளது. பேச்சு மொழி, புத்தக மொழி இவற்றுக்கிடையேயான பெரும வேறுபாடுகளை நம்மால் குறைத்துக் கொள்ள முடியவில்லை. பத்திரிகை, வானொலி, டி.வி, சினிமா போன்ற சாதனங்கள் அவற்றை நிரந்தரப்படுத்துவதிலேயே ஈடுபட்டுள்ளன.

இது நிறுத்தப்பட்டு நமது எழுத்து, பேச்சு சாதனங்கள் சிறிது சிறிதாக சுத்தமான ஒருங்கிணைப்பான தமிழின் பக்கம் தம் பார்வைகளைத் திருப்ப வேண்டும். ஆரம்பப் பள்ளி நிலையிலிருந்தே இந்த உணர்வுகளுக்கு வடிவம் கொடுக்கத் தொடங்க வேண்டும். இயல், இசை, நாடகம் ஆகிய எல்லாத் துறைகளிலும் ஒருங்கிணைப்பு ஏற்பட்டு எளிமையான இலக்கணத் தமிழே எல்லா வீடுகளிலும் புழங்க ஆரம்பிக்க வழிவகைகள் காண வேண்டும்.

தமிழ் என்றால் எல்லாத் தமிழர்களும் ஒரே மாதிரியாகத்தான் பேசுகிறார்கள், எழுதுகிறார்களென்று அனைவரும் கூறுமளவிற்கு தமிழை நாம் கொஞ்சமாவது உயர்த்தித்தான் ஆக வேண்டும். இதற்கு நாளாகலாம். இருந்தாலும் நாளைக்காவது நாம் இதைச் செய்தே தீரவேண்டும்.

# வடமராட்சியில் ஐஸ்கட்டி உற்பத்தி 'யு.எஸ்.எயிட்' நிறுவனம் நிதியுதவி



(பருத்தித்துறை)

பருத்தித்துறை கற்கோவளம் ஜெயந்தா கைத்தொழிற் பூங்காவில் ஐஸ் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதற்கு யு.எஸ். எயிட் நிறுவனம் விசேட மானிய உதவியைய் வழங்கவுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் யு.எஸ்.எயிட் ஆதரவிலான செயற்பாடுகள் மீதான முன்னேற்றத்தைப் பார்வையிடுவதற்காக இலங்கைக்கு 3 நாள் விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்திருந்த யு.எஸ்.எயிட்டின் அதிகாரிகள் குழுவைச் சேர்ந்த சிரேஷ்ட பிரதி நிர்வாக அதிகாரி டெனிஸ் ரோலின்சும், ஜெயந்தா ஐஸ் தொழிற்சாலை நிறைவேற்று பிரதம அதிகாரி பொறியியலாளர் திருநாவுக்கரசு சேந்தனும் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இத்திட்டத்தின் கீழ் ஜெயந்தா ஐஸ் தொழிற்சாலைக்கு யு.எஸ்.எயிட் மூலம் 2 இலட்சத்து 75 ஆயிரம் அமெரிக்க டொலர் மானிய உதவி வழங்கப்படவுள்ளது.

யு.எஸ்.எயிட் உயரதிகாரிகள் குழு ஜெயந்தா ஐஸ் தொழிற்சாலைக்கு நேரில் விஜயம் செய்து ஐஸ் தொழிற்சாலையின் செயற்பாடுகளை பார்வையிட்டனர். இங்கு இவ் ஐஸ் தொழிற்சாலை அபிவிருத்தி பற்றிய கூட்டமும் இடம்பெற்றது.

இங்கு தலைமை உரை நிகழ்த்திய ஜெயந்தா ஐஸ் தொழிற்சாலை பிரதம நிறைவேற்று அதிகாரி பொறியியலாளர் சேந்தன் குறிப்பிட்டதாவது,

3 இலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டொலர் ஆரம்ப முதலீட்டில் இந்த ஐஸ் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. மீனவர்களின் இன்றைய தேவைகளைப் பூர்த்திசெய்ய இந்த ஐஸ் தொழிற்சாலையை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இது இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பு வசதிகளை பெற்றுக்கொள்ள வழிவகுக்கும். இப்பிரதேசத்தை மீன்பிடி அபிவிருத்தி மேம்பாட்டிற்கு ஐஸ் உற்பத்தி, குளிரூட்டும் அறை வசதிகள், மீன்பிடி துறைமுகம் என்பன அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன.

இந்நிலையில் யு.எஸ்.எயிட் இப்பிரதேசத்திற்கு உதவ முன்வந்திருப்பது மிக மகிழ்ச்சிக்குரியது என்றார். (01)

# கிளிநொச்சியில் கஞ்சா வியாபாரிக்கு சிறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட நபருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா அபராதமும் 6 மாத கடூழிய சிறைத் தண்டனையும் அனுபவிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபரை பொலிஸார் கைதுசெய்து நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி குறித்த நபருக்கு மேற்படி அபராதமும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழிய சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (கே)

# கசப்பான அனுபவங்களான இலங்கை – இந்திய உறவு

## தூதுவர் தயான் ஜயதிலக கவலை

(கொழும்பு)

ஜெனிவா தீர்மானத்தினை இந்தியா ஆதரித்தமையானது இலங்கை - இந்திய உறவுகளில் சாதகமான விளைவுகளை தர மாட்டாது என பிரான்ஸுக்கான இலங்கை தூதுவர் தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார். அயல் நாடான இந்தியா இலங்கையின் அரசியல், வரலாற்றுப் பின்னணியில் புரையோடிப்போன , தவிர்க்க முடியாத உறவுகளை கொண்டிருப்பதாகவும் அதே வேளை இந்திய - இலங்கை உறவுகளில் வரலாறு சில கசப்பான அனுபவங்களையும் விட்டுச்செல்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா தனது எண்ணங்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கும் என்பதனை தான் ஆறு மாதங்களுக்கு முன்னரே கட்டுரை ஒன்றில் எழுதி இருந்ததாகவும் கூறிய தயான் ஜயதிலக, பொதுமக்களிடையே ஒரு பொது கருத்துக்கணிப்பு எடுத்தால்தான் இந்திய - இலங்கை உறவின் உண்மைத் தன்மை புரியும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைக்கு அப்பால் சென்ற விடயங்கள் அமெரிக்காவின் யோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சர்வதேச சட்டத்தை மீறியதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு, மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் உதவியை பெற்றுக் கொள்ளுதல் போன்ற விடயங்கள் அந்த யோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதில் ஓரளவு பயங்கரமான நிலைமையை காண முடிவதாகவும், இலங்கை மீதான இந்த யோசனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இறுதி நடவடிக்கை என்ன என்ற இறுதி முடிவுக்கு வரமுடியவில்லை.

இதில் இருந்து மீள முடியும் என்ற போதிலும் யோசனை மூலம் அழுத்தங்கள் கொடுக்கப் பட மாட்டாது என கூறமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நயினாதீவு...

இது குறித்து உடனடியாக கடற்படையினருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கடற்படையினர் அந்நபரை காப்பாற்றி புங்குடுதீவு வைத்தியசாலையில் அனுமதித்து மேலதிக சிசிக்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். இச்சம்பவத்தில் மண்கும்பானைச் சேர்ந்த சுந்தரலிங்கம் பிரியங்கன் (வயது - 30) என்பவரே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இதேவேளை, வேலணை பிரதேச சபை தவிசாளரும், ஈ.பி.டி.பி வேலணை பிரதேச அமைப்பாளருமான சிவராசா சம்பவ இடத்திற்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளைக் கேட்டறிந்தார். (85)

## ராஜேஸ்வரி...

கடந்த 16 ஆம் திகதி தனது 72 ஆவது பிறந்த தினத்தினை கொண்டாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. வானொலித்துறையில் நீண்டகால அனுபவமுள்ள ராஜேஸ்வரி சண்முகத்தின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்.

தமிழ் நாட்டில் தூத்துக்குடியில் பிறந்த இவர், சிறு வயதிலேயே இலங்கைக்கு வந்து வாழத் தொடங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"வானொலிக் குயில்" என்று செல்லமாக எல்லோராலும் அழைக்கப்படும் ராஜேஸ்வரி சண்முகம் அவர்களின் இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால அவகாசம்...

ஆதரவாக இந்தியா வாக்களித்தமை தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் இந்திய வெளிவிவகார அமைச்சு இந்த அறிக்கையை விடுத்துள்ளது.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அப்பால் செல்லும் அதிகாரப் பகிர்வுக்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

அதனூடாக தமிழ் மக்கள் உள்ளிட்ட அனைத்து இன மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கையில் இறைமைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதுடன் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் இந்தியா கூறியுள்ளது.

இந்தப் பிரேரணைக்கு அமைவாக, இலங்கைக்கு மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் இருந்து ஏதேனும் உதவிகள் கிடைப்பதாக இருந்தாலோ அல்லது ஐ.நா விசேட பிரதிநிதி ஒருவர் விஜயம் மேற்கொண்டாலோ அது இலங்கை அரசாங்கத்தின் பூரண இணக்கப்பாட்டுடன் இடம்பெற வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தனது நிலைப்பாட்டிற்கு இணங்கியே இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது எனவும் இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்காக கரிசனைகள் வெளிப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டுமென விரும்பியதாகவும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார். இலங்கையின் இறைமையை இந்தியா மீற விரும்பவில்லை எனவும் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

# சாமஸ்ரீ பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

சமய, சமூக, கலை, கலாசாரம் போன்ற பொது விடயங்களில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களுக்கான சாமஸ்ரீ பட்டமளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் கலாசார வரவேற்பு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மகளிர் விவகார சிறுவர் பராமரிப்பு பிரதி அமைச்சர் அல்ஹாஜ் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ், கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தமிழர்கள்...

மன்னிப்பு கோர வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

தலைவர் டி.எஸ்.சேனநாயக்க இலங்கைக்கென தனி அடையாளத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் பாடுபட்டார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## எதிர்க்கட்சியின்...

காலத்தில் கொண்டு செல்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளுக்கு தாம் நன்றிகளை தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## வலி.தென்மேற்கு...

தவிசாளர் உரிய பதில் வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

எனினும் தவிசாளர் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு ஆக்கபூர்வமான எந்தப் பதிலும் வழங்கவில்லை.

ஆளும்கட்சியின் 12 உறுப்பினர்களில் 9 பேர் ஓரணியாகவும், தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர் சுப்பிரமணியம் மற்றொரு அணியாகவும் கடும் வாதப் பிரதிவாதம் புரிந்தனர்.

காலை 9.30 மணியளவில் ஆரம்பமான கூட்டம் மாலை 2.00 மணியளவில் எந்த முடிவும் எடப்படாமல் முடிவடைந்தது. (54)

# கனடாவும் வரவேற்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் பிரேரணை நிறைவேற்றப்பட்டமையை கனடாவும் வரவேற்றுள்ளது. கனேடிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் பார்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும் கனடா தொடர்ந்தும் யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைக்கு வலியுறுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை அரசாங்கம் இன்னும் போதுமான அளவில் மனித உரிமைகள் தொடர்பில் செயற்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் தற்போது ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து, இலங்கை அரசாங்கம் உரிய செயற்திட்டம் ஒன்றை வகுத்து செயற்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சிவாஜி, சிறீகாந்தாவுக்கு...

கூட்டத்திலிருந்த செல்வம் எம்.பி. எதுவித கருத்துக்களையும் தெரிவிக்காமல் மௌனமாக இருந்தாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜெனிவா மாநாட்டில் கூட்டமைப்பு கலந்துகொள்ளாதமை குறித்து தாம் விமர்சனம் செய்ததாலேயே கூட்டத்திற்கு அனுமதிக்கவில்லை என தெரிவிக்கும் கூட்டமைப்பு சுரேஷ் பிரேமச் சந்திரனை மட்டும் எவ்வாறு கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதித்தது அவ்வாறெனில் சுரேஷிற்கு கூட்டமைப்பு தலைமை அச்சப்படுகிறதா எனவும் சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

## கிளிநொச்சியில்...

நிறுவனங்களை நாம் உச்ச முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

.வன்னி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் பெருமளவு பாரிய அபிவிருத்திகள் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கண்களுக்கு முன்னால் நடைபெறுகின்ற அபிவிருத்திப் பணிகளை கண்டு கொண்ட பின்னரும் சில ஊடகங்களும் சில அரசியல்வாதிகளும் இங்கு எதுவுமே நடைபெறவில்லை என பிரசாரம் செய்து வருகின்றனர் அவ்வாறானவர்களுக்கு இந்த நிகழ்வும் ஒரு எடுத்துக்காட்டாகும். அறிவியல் நகரில் அமைக்கப்பட இருக்கும் இலங்கை ஜேர்மன் தொழில் பயிற்சி நிறுவனமானது வடகிழக்கில் மிக பாரிய தொழில் பயிற்சி நிறுவனமாக செயற்படும். ஒரு பல்கலைக்கழகம் போன்று அனைத்து வசதிகளும் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது. 12 தொழில்நுட்ப பாடநெறிகள் கற்பிக்கப்படுவதோடு வருடம்தோறும் 200 இளம் பயிலுநர்கள் பயிற்சிகளை மேற்கொள்வர் என்றார்.

இந்நிகழ்வில் இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி பிரதி அமைச்சர் துமிந்த திஸ்ஸநாயக்க, இலங்கைக்கான ஜேர்மன் தூதர் ஜென்ஸ் ப்லொட்னர், அமைச்சின் செயலாளர் கேவபத்திரன, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், 'நைட்டா' நிறுவனத் தலைவர் திஸ்ஸ ஜினசேன உள்ளிட்ட அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மனித உரிமை பாதுகாவலர்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கக்கூடாது



## கோரிக்கை விடுக்கிறார் நவநீதம்பிள்ளை

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைப் பாதுகாவலர்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக்கூடாது என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் பங்குபற்றுவதற்காக இலங்கையிலிருந்து ஜெனிவா சென்ற மனித உரிமை ஆர்வலர்கள் மீது கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் ஜெனிவாவிற்கான இலங்கைப் பிரதிநிதிக்கு அநாமதேய மிரட்டல் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொலைக்காட்சிகள், இலத்திரனியல் ஊடகங்கள், செய்தித் தாள்கள் உள்ளிட்ட பலவற்றில் மனித உரிமை ஆர்வலர்களுக்கு எதிரான கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

குறிப்பாக தன்னார்வத் தொண்டு நிறுவனக் குழுக்கள் எனவும், நாட்டுக்கு எதிரானவர்கள் எனவும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர்.

மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

எனவே மனித உரிமை செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சில அரசாங்க ஊடகவியலாளர்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீது கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

சர்வதேச விவாதங்களில் தடையின்றி பங்கேற்கும் உரிமையை இலங்கை மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டிற்கு எதிரான அழுத்தம் முறியடிக்க அரசால் முடியும்



## அமைச்சர் பசில் நம்பிக்கை

(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்கள் ஒன்றும் எமக்கு புதிதல்ல என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச அழுத்தங்களை வெற்றிகரமாக முடியடிக்கக் கூடிய இயலுமை அரசிடம் உள்ளது. பயங்கரவாதம் இல்லா தொழிக்கப்பட்டமையினால் நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் கிரமமான பொருளாதார் கொள்கைகள் போன்றவற்றினால் எந்தவொரு சவாலையும் எதிர்நோக்க முடியும்.

இலங்கை காலத்திற்கு காலம் இவ்வாறான சர்வதேச அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஜீ.எஸ்.பி பிளஸ் உள்ளிட்ட பல்வேறு சவால்களை இந்த அரசாங்கம் வெற்றிகரமாக எதிர்நோக்கியது.

ஜெனிவா பிரேரணை மூலம் நாட்டுக்கு எதிராக அழுத்தங்களை பிரயோகிக்க முயற்சிக்கப்படுகின்ற போதிலும், அவ்வாறான அழுத்தங்களை முறியடிக்க எம்மால் முடியும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆட்டோவில் சென்ற இளைஞர்கள் வாள்வெட்டுக்கு இலக்காகினர்

## யாழ்.பாசையூரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாசையூர்ப் பகுதியில் ஆட்டோவில் பயணித்த மூன்று இளைஞர்களை வழிமறித்த கோஷ்டி ஒன்று அவ் இளைஞர்கள் மீது சரமாரியான வாள் வெட்டினை மேற்கொண்டதில் ஒரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரு இளைஞர் குழுக்களுக்கிடையே வலைப்பந்தாட்ட விளையாட்டின் போது ஏற்பட்ட தகராறின் பின்னணியிலேயே இந்த வாள்வெட்டு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாசையூரைச் சேர்ந்த றெக்னோ என்ற இளைஞரே வாள் வெட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலும் இருவரில் ஒருவர் சிறு காயத்துடன் தப்பியோடியதாகத் தெரியவருகின்றது.

கடந்த புதன்கிழமையும் திருநகர் பகுதியில் உறவினர்களிடையே ஏற்பட்ட தகராறில் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

# பலம்வாய்ந்த நாடுகளின் அழுத்தமே இலங்கை தோல்வியுறக் காரணம்

## என்கிறார் கருணாதிலக அமுனுகம

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்த யோசனை தொடர்பான வாக்கெடுப்பில் இலங்கை தோல்வியடையக் காரணம், பலம் வாய்ந்த நாடுகளின் அழுத்தங்களும், சில நாடுகளில் உள்நாட்டு அரசியல் நிலைமைகளுமே என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கை தோல்வியடைந்திருந்தாலும் தற்போது நாடு என்ற வகையில் இலங்கை செயற்படுத்தி வரும் வேலைத்திட்டங்களின் அடிப்படையில், மனித உரிமைப் பேரவை, இலங்கை தொடர்பில் தனது பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றை நியமிக்கும் நிலைமை ஏற்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவின் யோசனையின் அடிப்படையில், இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் செயற்படும் விதம் தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு அடுத்த வருடத்தில் அறிக்கை ஒன்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

புலம்பெயர் தமிழர்கள், அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் அரசியல் ரீதியான அழுத்தங்களை கொடுக்கும் மட்டத்திற்கு சென்றமை இந்த நிலைமை ஏற்பட மற்றுமொரு காரணமாக அமைந்துவிட்டது.



இந்தியாவின் உள்நாட்டு அரசியல் நிலைமைகள் காரணமாக இந்தியா, இலங்கைக்கு எதிராக வாக்களித்தது. எவ்வாறாயினும் யோசனை மீதான வாக்கெடுப்பின் போது, இலங்கையுடன் உறவுகளை வைத்துள்ள நாடுகளை இலங்கை மறக்காதது மகிழ்ச்சிக்குரிய விடயம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜெனிவா தீர்மானம் குறித்து அரசு ஆவேசமடையக்கூடாது



## ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவா யோசனை தொடர்பில் ஆத்திரமடையாமல், சர்வ தேசத்திற்கு எதிராக கோஷமிடாது, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை களை செயற்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கடந்த டிசம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பித்து, காலதாமதமின்றி, அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தால், தற்போது சர்வதேசத்தில் யோசனை ஒன்றை கொண்டு வரும் சந்தர்ப்பம் கிடைத்திருக்காது எனவும் கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்னின்று செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எபபோதும் நாட்டுக்காக செயற்பட்டு வரும் ஐக்கிய தேசியக் கட்சி, இவ்வாறான நேர்மையான நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவை வழங்கும்.

எனினும் அரசாங்கம் தனிப்பட்ட தேவைக்காவும், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும் செயற்பட்டால், நாட்டின் எதிர்காலம் மேலும் இருளடைவதை தவிர்க்க முடியாது எனவும் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க பொருட்களை புறக்கணிக்குமாறு ஆர்ப்பாட்டம்




இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைக் பேரவையில் தீர்மானம் கொண்டுவந்துள்ள அமெரிக்காவின் உற்பத்திப் பொருட்களை இலங்கை மக்கள் புறக்கணிக்க வேண்டும் எனக் கோரி நேற்றைய தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

தேசப்பற்றுடைய தேசிய அமைப்பினரும் பௌத்த பிக்குகளும் கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறக்கோட்டை போதிராஜ விகாரை வரை ஊர்வலமாக வந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய தேசப்பற்றுடைய தேசிய அமைப்பின் செயலாளர், இலங்கை மீது அமெரிக்கா தனது ஆதிக்கத்தைச் செலுத்தப் பார்க்கிறது என்று கூறினார்.

ஐ.நா.மனித உரிமைக் பேரவையில் தீர்மானம் நிறைவேறியிருந்தாலும் அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் அனுமதி அளிக்ககூடாது என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அமெரிக்காவுக்கு பலத்த எதிர்ப்பை தெரிவிப்பதன் மூலமே அதன் ஆதிக்க முயற்சியைத் தோற்கடிக்க முடியும்.

ஆகவே அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களை இலங்கை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். கொக்ககோலா, கோதுமை மா உட்பட எது எது அமெரிக்க உற்பத்திப் பொருட்கள் என மக்களுக்குத் தெரிவிக்கும் துண்டுப் பிரசுரங்களும் இந்த ஆர்ப்பாட்டத்தின்போது விநியோகிக்கப்பட்டது.

# இந்தியா இருப்பது யார் பக்கம்?

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையை நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அந்த அறிக்கை தொடர்பில் அரசு தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும். குறித்த ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விடயங்கள் தவறானவை அத்துடன் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட முறைமையும் தவறானது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு அமைக்கப்பட்டதும் கூட மேற்கத்தேய நாடுகளின் அழுத்தம் காரணமாகவே.

இலங்கை அரசாங்கம் கூறுகிறது இந்தியா தமது பக்கம் இருப்பதாக. ஆனால் நாம் கூறுகிறோம் இந்தியா இருப்பது அந்த நாட்டு மக்களின் பக்கம். அது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவடைந்து 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தார். அப்போது நாம் நினைத்திருந்தோம் அவர் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை கட்டியெழுப்பவது தொடர்பில் உரையாற்றுவார் என. ஆனால் அவர் தனது உரையில் எதனையுமே குறிப்பிடவில்லை. அவரது அன்றைய பேச்சில் எந்த உருப்படியான விடயங்களும் உள்ளடக்கப்படவில்லை.

# நாட்டிற்கு எதிராக கருத்துக்களைக் கூறும் ஊடகவியலாளரின் கை, கால் உடையும்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் சென்று இந்நாட்டிற்கு எதிராக பல்வேறு கருத்துகளை கூறும் ஊடகவியலாளர்கள் நாட்டிற்குள் கால் வைத்தால் அவர்களின் கைகால்களை உடைப்பேனென பொது மக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

பொத்தல ஜயந்த எனும் ஊடகவியலாளரை நான்தான் இந்நாட்டிலிருந்து விரட்டினேன். இத்தகைய ஊடகவியலாளர்கள் அனைவரும் நாட்டிற்குள் கால் பதித்தால் அவர்களின் கால் கைகளை உடைப்பேன் என அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்தார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கிரிபத்கொடையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.